விலை: 60.00
பக்கங்கள் - 24
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka




# வலம்புரி
## சங்குநாதம்

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 206 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 29 ஞாயிற்றுக்கிழமை (13.07.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

நெடுந்தீவில் சுற்றுலாப் பயணிகளை

## அழைத்துச் சென்ற படகு நடுக்கடலில் மூழ்கியது

14 பேர் மயிரிழையில் உயிர் பிழைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நெடுந்தீவில் இருந்து சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் சென்ற படகு ஒன்று நடுக் கடலில் மூழ்கிய 23ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் அமைதியின்மை ஒருவர் பலி; 5 பொலிஸார் காயம்

பொலிஸாரின் மூன்று வாகனங்கள் சேதம்



(வவுனியா)

வவுனியா கூமாங்குளம் பகுதியில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற அமைதியின்மை காரணமாக ஒருவர் உயிரிழந்ததுடன் 5 பொலிஸார் காயமடைந்தனர். 23ஆம் பக்கம் பார்க்க

செம்மணி மனிதப் புதைகுழியில்

# எலும்புக்கூடுகளை அகழ்வதனால் என்ன பயன்?

மீண்டும் வன்மத்தைக் கக்கும் விமல் வீரவன்ஸ



(கொழும்பு)

செம்மணி மனிதப் புதைகுழியில் எலும்புக்கூடுகளை அகழ்வதனால் என்ன பயன் கிடைக்கும் என்று விமல் வீரவன்ஸ கேள்வி எழுப்பியுள்ளார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## ரயில் மோதியதில் ஒருவர் உயிரிழப்பு

கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தொண்டமாநகர்ப் பகுதியில் புகையிரம் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் இரவு 23ஆம் பக்கம் பார்க்க

இலங்கைக்கான

## புதிய அமெரிக்க தூதுவராக எரிக் மேயர்?



(கொழும்பு)

இலங்கைக்கான அமெ 23ஆம் பக்கம் பார்க்க

## ஹயஸ் மோதியதில் இ.போ.ச நடத்துநர் பலி

பிள்ளைகளுக்கு உணவு வாங்கச் சென்றபோது திருநெல்வேலியில் விபரீதம்



(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியில் ஹயஸ் ரக வாகனம் மோதியதில் குடும் 23ஆம் பக்கம் பார்க்க

- ஆலடி மாநாடு
- ஆச்சி அறிவுரை
- கவிதைக் கலசம்
- வியாசர் பதில்கள்
- அரசியல் கட்டுரைகள்

இன்னும் பல அம்சங்களுடன்
சங்குநாதம்
உள்ளே...

## அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி

நூதனப் போராட்டம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

'விடுதலை பெருவிருட்சம் வேரூன்றித் தளைத்திட ஒரு குவளை நீர் உவந்து உறவுகளை விடுவிப்போம்' எனும் தொனிப்பொருளில் நூதனப் போராட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - திருநெல் 23ஆம் பக்கம் பார்க்க




நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நாகபூஷணி திருமண சேவை

உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் எம்மால் தெரிவு செய்து தரப்படும்.

359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(துர்க்கா மணி மண்டபத்திற்கு அருகாமையில்.)
077 138 7596, 071 999 9306
(4788)

## Vacancy

- Sales Manager (Basic 90,000/=)
- ASM(Basic : 60,000/=)
- Online, part time staffs

அனுபவம் இல்லாதவர்களுக்கு பயிற்சி வழங்கப்படும்.

Contact : 077 996 9661
(4782)

## 22 விற்பனைக்கு 22

01. யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் சிக்னல் சந்திக்கு அண்மையில் 10 கடைத் தொகுதியும் 20 பரப்புக் காணியும் இணைந்த கட்டிடமும்
02. யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக 6 பரப்புக் காணியும்
03. யாழ்.மின்சார நிலைய வீதி பழைய தபால்கந்தோர் வீதியில் 6 பரப்புக்காணியும்
04. யாழ்.மின்சார நிலைய வீதி C.T.B தரிப்பிடத்திற்கு பின்பாக 16 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட இரண்டு கடைகள்
05. யாழ்.கஸ்தூரியார் வீதியில் கபிலா பாட்டாக் கடைக்கும் வின்சர் சந்திக்கும் இடையில் 4 கடைகளும்
06. யாழ்.ஸ்ரான்லி வீதியில் வெலிங்டன் சந்திக்கும் வின்சர் சந்திக்கும் இடையில் 4 கடைகளும்
07. யாழ்.கே.கே.எஸ் வீதியில் தட்டாதெருச் சந்திக்கு அண்மையில் கே.கே.எஸ் வீதி முகப்புடன் 10 பரப்புக் காணியுடன் சேர்ந்த கட்டிடமும்
08. யாழ்.குளப்பிட்டி சந்திக்கு அண்மையில் 6 பரப்பில் அமைந்த காணியும்
09. யாழ்.கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் நாவலர் றோட் முகப்புடன் 12 பரப்புக் காணியும்
10. யாழ்.நல்லூர்க் கோவிலுக்கு அண்மையில் 22 பரப்பும் 25 பரப்புக் காணியும்
11. யாழ். நல்லூர் குறோஸ் றோட்டில் 10 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு
(C-3398)

077 723 2535


## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 23 - 09 - 1943 | 08 - 07 - 2025 |



### கமலாதேவி ஸ்ரீனிவாசன்

செல்லையாச் செட்டியார் - பாக்கியம் தம்பதியரின் மகளும் கந்தையாச் செட்டியார் - இராசம்மா தம்பதியரின் மருமகளும் ஸ்ரீனிவாசன் அவர்களின் அன்பு மனைவியுமாகிய ஸ்ரீனிவாசன் கமலாதேவி அவர்கள் 08.07.2025 அன்று காலமாகிவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் நாளை 14.07.2025 (திங்கட்கிழமை) தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
பெறாமகள்
யோகேந்திரகுமார் [illegible]

தொடர்புகளுக்கு :
+33 775 72 32 13
(3399)

உ
சிவமயம்



## சிவபூமி திருவாசக அரங்கம்

## திறப்பு விழா அழைப்பு

சிவபூமி திருவாசக அரண்மனை
நாவற்குழி

காலம்
14.07.2025 திங்கட்கிழமை
பிற்பகல் 04.00 மணி

தலைமை
**செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்**
(தலைவர் - சிவபூமி அறக்கட்டளை)

பிரதம விருந்தினர்
**வைத்திய நிபுணர் வை.மனோமோகன் சிவகௌரி தம்பதிகள்**
(அவுஸ்திரேலியா)

சிறப்பு விருந்தினர்
**கௌரவ திரு.நா.வேதநாயகன்**
(ஆளுநர் - வட மாகாணம்)

கௌரவ விருந்தினர்
**பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா**
(துணைவேந்தர் - யாழ்.பல்கலைக்கழகம்)

ஆசியுரை
**சிவஸ்ரீ.சபா.வாசுதேவகுருக்கள்**
(சரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோவில் - சண்டிலிப்பாய்)

**ஸ்ரீ வேத வித்தியாசாகர் சுவாமிகள்**
(முதல்வர் - வேதாந்தமடம்)

வரவேற்புரை
**வைத்திய நிபுணர் த.பேரானந்தராஜா**
(உப தலைவர் - சிவபூமி அறக்கட்டளை)

வாழ்த்துரை
**பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை**
(முன்னாள் துணைவேந்தர் - யாழ்.பல்கலைக்கழகம்)

**பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா**
(முன்னாள் தலைவர் தமிழ்த் துறை - யாழ்.பல்கலைக்கழகம்)

சிறப்புரை
**திரு.ந.விஜயசுந்தரம்**
(பிரதம ஆசிரியர் - வலம்புரிப் பத்திரிகை)

சிறப்பு மலர் வெளியீடு
**நூல் அறிமுகம் - பொறியியலாளர் ச.சந்தோஷ்**

இசை அர்ப்பணம்
**இசைத்துறை ஆசிரியர்கள்**

விருந்தினர் உரை
**திருமுறை நடன அர்ப்பணம்**
பொன்னாலை சந்திர பரத கலாலய மாணவர்கள்
நெறியாள்கை திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(4779)


## UBER சேவை யாழில்

நீங்கள் உங்கள் வாகனங்களை எம்முடன் இணைத்து மாதம் 200,000/- வருமானம் பெறலாம்.
விபரங்களுக்கு அழைக்கவும்.

070 500 2051
070 500 2054
(C-204)


## மாரடைப்பால் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டியில் மாரடைப்புக் காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இதில் சிறுப்பிட்டி வடக்கு நீர்வேலியைச் சேர்ந்த இராமச்சந்திரன் ஜெயக்காந்தன் (வயது 40) என்பவரே உயிரிழந்தவராவார்.

தனது வீட்டில் மயக்கமுற்ற அவரை உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

பிரேதப் பரிசோதனையில் மாரடைப்பாலேயே மரணம் சம்பவித்ததாக தெரியவந்துள்ளது. (ம-7)

## அநுராதபுரத்தில் கொள்ளை

(அநுராதபுரம்)

அநுராதபுரம் - திறப்பனை நகரத்திற்கு அருகில் உள்ள வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்த கொள்ளையர்கள் இருவர் வீட்டு உரிமையாளரை பொல்லால் தாக்கி காயப்படுத்திவிட்டு, பெறுமதியான பொருட்களை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக திறப்பனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த கொள்ளை சம்பவம் கடந்த வியாழக்கிழமை (10) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

2 தங்க மாலைகள், மோதிரம், தங்க வளையல், பென்டன் மற்றும் பணம் உள்ளிட்ட பொருட்களே இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)


## தேவை

தங்கி நின்று வேலை செய்யக் கூடிய வீட்டுப் பணிப் பெண் தேவை.

தொடர்பு:
075 021 5299
(4782)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச சேவையில் 30,000 புதிய ஆட்சேர்ப்புகள்

## ஜனாதிபதி அறிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் 5 ஆண்டுகளுக்குப் பிறகு அரச சேவைக்குப் புதிதாக 30,000 பேரைச் சேர்க்க திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அம்பந்தோட்டை மாவட்ட விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

வீழ்ச்சியடைந்துள்ள அரச சேவையை வலுப்படுத்த அரசாங்கம் திட்டங்களைத் தயாரித்துள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

அரச நிறுவனங்களில் அதிகாரிகள் பற்றாக்குறை உள்ளிட்ட பிரச்சினைகளால் இலங்கையின் அரச சேவை பலவீனமடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

பிரதேச செயலாளர்கள் உட்பட ஒவ்வொரு துறையிலும் பணியாற்றுபவர்களின் வசதிக்காக தேவையான வாகனங்களை வழங்குவதற்கான நிதியை எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்க எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் நாட்டில் டிஜிட்டல் மாற்றம் ஏற்படுவது அரசாங்கத்தின் அடிப்படைத் திட்டம் எனவும் டிஜிட்டல் அடையாள அட்டை அதில் ஒரு புதிய பாய்ச்சல் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

## பால் உற்பத்தி செய்யும்

# ஆயிரத்து இருநூறு பண்ணைகள் திறக்கப்படும் - பிரதியமைச்சர்

(கொழும்பு)

100 லீற்றருக்கு மேல் பால் உற்பத்தி செய்யும் 1,200 பண்ணைகள் திறக்கப்படும் என்று வேளாண்மை மற்றும் கால் நடை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

எங்கள் நாட்டின் தினசரி பால் உற்பத்தி சுமார் ஒரு மில்லியன் லீற்றராக உள்ளது. அதை மூன்று மில்லியனாக அதிகரிக்க இலக்கு வைத்துள்ளோம்.

பால் உற்பத்தியின் மதிப்பை அதிகரிக்க மத்திய மையங்களை கட்டி வருகிறோம்.

அந்த திட்டத்தை நாங்கள் அநுராதபுரத்தில் இருந்து தொடங்குவோம். அதன் மூலம் பால் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப மற்றும் நிதி உதவியை வழங்குவோம்.

நல்ல இனப்பெருக்க பண்ணைகளைத் தொடங்கி விவசாயிகளுக்கு நல்லதாய் விலங்குகளை வழங்கும் திட்டத்தை தொடங்கியுள்ளோம்.

அரசின் தலையீடு மூலம் முட்டைகளை உற்பத்தி செய்யும் சிறிய பண்ணைகளுக்கு மானிய விலையில் சோளத்தை வழங்கவும் பணியாற்றி வருகிறோம்.

வைரஸ் காரணமாக அழிக்கப்பட்ட பன்றித் தொழிலை புதிதாகக் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)

# பாக். இராணுவத் தளபதி இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

பாகிஸ்தான் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சையத் அசிம் முனீர் நாளை திங்கட் கிழமை இலங்கை மற்றும் இந்தோனேசியாவிற்கு விஜயம் செய்யவுள்ளதாக பாகிஸ்தானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கை விஜயத்திற்குப் பின் பீல்ட் மார்ஷல் சையத் அசிம் முனீர் இந்தோனேசியா விற்கும் விஜயம் செய்யவுள்ளார்.

இரு நாடுகளின் வருகைகளின் போதும், இருதரப்பு நலன் சார்ந்த விடயங்கள் தொடர்பில் அதிகாரிகளுடன் கலந்துரையாடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)



# ரஷ்ய அமைச்சரை சந்தித்தார் விஜித ஹேரத்

(கோலாலம்பூர்)

மலேசியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், அங்கு ரஷ்யாவின் வெளிவிவகார அமைச்சர் செர்கே லாவ்ரொவ்வை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்ற 58 ஆவது ஆசிய நாடுகள் சங்கம் பிராந்திய கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக மலேசியா சென்ற வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், அங்கு ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் செர்கே லாவ்ரொவ்வை சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளார்.

இந்த சந்திப்பின் போது, இலங்கை - ரஷ்ய உறவுகள் மற்றும் சர்வதேச அரங்கில் இரு நாடுகளின் ஒருங்கிணைந்த ஒத்துழைப்பு குறித்து முக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன. (நி)




காரைநகர் வியாவில்பதி ஆதிஷேத்திரம்
திருவருள்மிகு பூரணா புஷ்கலா சமேத ஹரிஹரபுத்ர
ஐயப்ப சுவாமி தேவஸ்தானம்
திவ்ய மஹோற்சவ விஞ்ஞாபனம்-2025

காருறழ் வெய்ய களிற்றிடையாகிப்
பாரிடர் எண்ணிலர் பாங்குற நண்ணப்
பூரணை புட்கலை பூம்புற மேவ
வாரணம் ஊர்பவன் முன்னுற வந்தான்.
-கந்தபுராணம்

ஐயனார் அடியார்களே!

சைவமும் தமிழும் திகழ்ந்து தானதருமமும் தவமும் விளங்கும் புண்ணிய பூமியாகிய காரைநகரிலே ஆதிஷேத்திரமாக விளங்கும் வியாவில் பதியிலே திருவருளாட்சி புரிகின்ற பூரணா புஷ்கலா சமேத ஹரிஹரபுத்ர ஐயப்ப சுவாமிக்கு, நிகழும் விசுவாவசு வருடம் ஆனி மாதம் 31 ஆம் நாள் 15.07.2025 செவ்வாய்க்கிழமை பஞ்சமி திதியும், பூரட்டாதி நட்சத்திரமும் கூடிய முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் திவ்விய மஹோற்சவம் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நிகழத் திருவருள் பாலித்துள்ளது. அத் தருணம் அடியார்கள் வருகை தந்து ஹரிஹரபுத்ர ஐயப்ப சுவாமியைத் தரிசித்து திருவருளைப் பெற்றுய்வீர்களாக.

கிரியாகால நிகழ்வுகள்

| | | | |
|---|---|---|---|
| ஆனி 30 ஆம் நாள் | 14.07.2025 | திங்கட் கிழமை | மாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், மாலை 7.00 மணிக்கு அனுக்ஞை, கிராமசாந்தி,வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரணம் |
| ஆனி 31 ஆம் நாள் | 15.07.2025 | செவ்வாய்க் கிழமை | காலை 7.00 மணிக்கு அபிஷேகம், விசேட பூஜை. 8.00 மணிக்கு வசந்தமண்டப பூஜை.10.30 மணிக்கு கொடியேற்றம், நவசக்தி ஆவாகனம். மாலை 6.00 மணிக்கு மஹா சாஸ்தா யாகாரம்பம் |
| ஆடி 06 ஆம் நாள் | 22.07.2025 | செவ்வாய்க் கிழமை | காலை 8.00 மணிக்கு புதிய சப்பறம் வெள்ளோட்டம் (சப்பற நிர்மாணம் ச.விஜயரத்தினம் குழுவினர்) மாலை 5.00 மணிக்கு வேட்டைத் திருவிழா. இரவு 8.00 மணிக்கு வசந்த மண்டப பூசை, சகோபுர உற்சவம் (சப்பறத் திருவிழா) |
| ஆடி 07 ஆம் நாள் | 23.07.2025 | புதன் கிழமை | காலை 6.00 மணிக்கு அபிஷேகம், விசேட பூஜை, 9.00 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை. 10.00 மணிக்கு இரதோற்சவம், 11.30 மணிக்கு பச்சை சாத்தி இரத அவரோகணம்,பிராயசித்த அபிஷேகம் |
| ஆடி 08 ஆம் நாள் | 24.07.2025 | வியாழக் கிழமை | ஆடி அமாவாசை விரதம், காலை 6.00 மணிக்கு அபிஷேகம், விசேட பூஜை. தொடர்ந்து வசந்த மண்டபப் பூஜை, தீர்தோற்சவம், மகாயாக அபிஷேகம், பூஜை. மாலை கொடியிறக்கம் சந்தி விசர்சனம், மௌன உற்சவம், ஆச்சாரிய உற்சவம். அருளுரை. |
| ஆடி 09 ஆம் நாள் | 25.08.2025 | வெள்ளிக் கிழமை | மாலை 7.00 மணிக்கு ஊஞ்சல், உள்வீதி உற்சவம், திருக்கல்யாணம், வெளிவீதி உற்சவம் |
| ஆடி 10 ஆம் நாள் | 26.08.2025 | சனிக் கிழமை | காலை 10.00 மணிக்கு பிராயசித்த அபிஷேகம், மாலை 5.00 மணிக்கு வைரவர் பொங்கல். பூஜை வழிபாடு |

ஆலய குரு
பிரம்மஸ்ரீ ச.அகிலன் சர்மா
(காரைநகர்)

மஹோற்சவ தேவஸ்தான பிரதமகுரு
சிவாகம ரத்னகர சிவாகம வாஸஸ்பதி
சிவஸ்ரீ க.ச.சோமாஸ்கந்தக் குருக்கள்
(பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்)

சர்வபோதகம்
சக்தி உபாசகர்
சிவஸ்ரீ நா.ஞானசம்பந்தக் குருக்கள் (மணற்காடு)

சப்பற நிர்மாணம்
ச.விஜயரத்தினம் குழுவினர்

மங்கள வாத்தியம்
காரை கணேஸ் புதல்வர்கள் (காரைநகர்)

ஒலி, ஒளி அமைப்பு
மகேஸ் குழுவினர் (காரைநகர்)

சர்வாலங்காரம்
பிரம்மஸ்ரீ ஞா.கபில்தேவ சர்மா (காரைநகர்)

ஆதி ஐயனார் ஆலயத்தில் சோழர்கால கட்டடக்கலை மரபிற்கேற்ப முன்பு இருந்த ஏழுநிலைக் கோபுரம் போன்று புதிய கோபுரம் எழுந்துள்ளது. இத்திருப்பணி வேலைகள் விரைவில் பூர்த்தியடைய அடியார்கள் தங்கள் பங்களிப்பை வழங்கி கோபுர கும்பாபிஷேக தரிசனம்பெற திருவருளை வேண்டுகின்றோம்.
வியாவில் ஐயனார் கோயில், வர்த்தக வங்கி கணக்கு இலக்கம்:- 1060015904



திருவிழா நாட்களில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். (C-3395)

விளம்பர அனுசரணை
கஜமுகன் ஹாட்வெயர்ஸ், ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
வியாவில், காரைநகர். ஆலய அறங்காவலர் 077 625 8239


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ பிளஸ் பிரியாணி

Biriyani

வாடிக்கையாளர்களுக்கு

## இனிமையான செய்தி...

எங்கள் மண்ணின் பாரம்பரிய பிரியாணிக்கு பெயர் பெற்ற ஏ பிளஸ்
உணவகத்தில் புதிய உணவு வகைகள் அறிமுகம்

- மதுரை சிக்கன் கொத்து
- மதுரை மட்டன் கொத்து
- சிக்கன் ப்ரைட் ரைஸ்
- முட்டை ப்ரைட் ரைஸ்
- ஏ பிளஸ் யூஸ்



இன்னும் பல
புதிய உணவுகள்.....

Qick FOOD
X EAT DELIVERY
PickMe Food
Uber Eats

ஊடாகவும் ஓடர் பண்ணலாம்.



- மேலும் திருமண வைபவங்கள், பிறந்தநாள் நிகழ்வுகள், அலுவலக நிகழ்வுகள் என்பவற்றை வழமைக்குமாறான வகையில் வித்தியாசமான உணவுகளுடன் அசத்த ஏ பிளஸ் ஐ நாடுங்கள்.
- இரவுநேர சிறு நிகழ்வுகளை ஏ பிளஸ்ஸில் கொண்டாடவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
- அஜினமோட்டா மற்றும் எந்தவித சேற்கைகளும் அற்ற சுத்தமான சுகாதாரமான உணவுகளுக்கு நாங்கள் உத்தரவாதம்

இந்த Bar Codeஇனை வெட்டி எடுத்து வருபவர்களிற்கு எல்லாவிதமான உணவுகளுக்கும் 20% விலைக்கழிவு வழங்கப்படும்.
இன்றுமுதல் 20ஆம் திகதி வரை

(C-3394)

இல.687, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
இல.3/106, இராமநாதன் வீதி, கலட்டி சந்தி.

0777 654 320
0777 214 321


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னை மரங்களை அழிக்கும் வண்டு

## விவசாயிகள் கவலை

(கந்தளாய்)

**தென்னை மரங்களை அழிக்கும் "தென்னம் வண்டு" எனப்படும் பூச்சித் தாக்குதல் தீவிரமடைந்து வருவதால் விவசாயிகள் பெரும் கவலைக்குள்ளாகியுள்ளனர்.**

கந்தளாய் பிரதேச சபைக்குட்பட்ட வென்றாசம் புரப் பகுதியில் இந்தத் தாக்கம் மிக அதிகமாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வண்டுத் தாக்குதலால் அப் பகுதியின் பெரும்பாலான தென்னை மரங்கள் தமது காய்க்கும் திறனை முற்றாக இழந்து அழிந்து வருகின்றன. இது தென்னை விவசாயத்தை நம்பியுள்ள பல குடும்பங்களின் வாழ்வாதாரத்தைப் பாதித்துள்ளது.

பாதிக்கப்பட்ட மரங்களுக்கு எணணெய் சார்ந்த மருந்துகளைத் தெளித்தும் இந்த பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்த முடியவில்லை என விவசாயிகள் விரக்தியுடன் தெரிவிக்கின்றனர்.


வண்டுகளின் பரவலைத் தடுக்கும் நோக்கில், வேறு வழியின்றி சில பாதிக்கப்பட்ட மரங்களுக்குத் தீ வைக்கும் நிலைக்கும் விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

இது அவர்களின் இழப்பை மேலும் அதிகரிப்பதாக உள்ளது. கந்தளாய் மட்டுமல்லாது, வான் எல, வட்டுகச்சி மற்றும் தம்பலகாமம் உள்ளிட்ட திருகோணமலை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இந்த பூச்சித் தாக்கம் அதிகரித்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தங்கள் வாழ்வாதாரத்தைப் பெருமளவு பாதிக்கும் இந்த தீவிரமான பிரச்சினையை உடனடியாகக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என தென்னை விவசாயிகள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர். (நி)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் - 21 - 05 - 1943



மறைவு - 14 - 06 - 2025

எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு 14.06.2025 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**அமரர். யுவதி செல்வநாயகம்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 13.07.2025 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை 14.07.2025 திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

(4763)

272, ஸ்ரேசன் வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

தகவல்—குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

பிறப்பு 08 . 03 . 1964



இறப்பு 11 . 07 . 2025

**திருமதி.றஞ்சிதமலர் இராசன்**

இமையாணன் கிழக்கு உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.றஞ்சிதமலர் இராசன் அவர்கள் 11.07.2025 வெள்ளிக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிங்கன்-கற்கண்டு தம்பதியினரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரன்-மாணிக்கம் தம்பதியினரின் பாசமிகு மருமகளும், இராசனின் அன்பு மனைவியும், பிரசாந்தினி (மக்கள் வங்கி-நெல்லியடி), குகசாளினி, அபிலாஷினி (நீதிமன்ற உத்தியோகத்தர்-மன்னார்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருபானந்தன் (நீதிமன்ற உத்தியோகத்தர்-பருத்தித்துறை), ஷாகித்தியன் (சணச அபிவிருத்தி வங்கி-மன்னார்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சிவலிங்கம், கணேசலிங்கம், நேசலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், தவமலர், றஞ்சிதமலர், சோபிதா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் அகரன், தூரிகன் ஆகியோரின் பாசமிகு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் 13.07.2025 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இமையாணன் கிழக்கு
உடுப்பிட்டி.

(C-3393)

தகவல் :
கிருபானந்தன் (மருமகன்) +94772543170


# இராசிபலன்

13.07.2025
ஆனி 29, ஞாயிற்றுக்கிழமை
திருதியை பின்னிரவு 1.43 மணிவரை

திருவோணம் முற்பகல் 8.13 மணிவரை
சுப நேரம் 8.59-10.29 மணிவரை
இராகுகாலம் 4.29-5.59 மணிவரை

சந்திராஷ்டமம்:-பூசம்

**வளவன்**


மேஷம்

தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வீட்டை சிரமைப்பதில் ஆர்வம் கூடும், உறவினர், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.


கடகம்

புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, எண்ணியது நிறைவேறும் வாய்ப்புண்டு, சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.


துலாம்

புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், புதிய வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.


மகரம்

ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவார்கள், திடீர் பயணங்கள் ஏற்படலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், கற்பனை மிகுதியான நாள்.


ரிஷபம்

பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், உறவினர் வழியில் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.


சிம்மம்

கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.


விருச்சிகம்

இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், விருந்தினர் வருகையுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.


கும்பம்

காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், குடும்ப பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.


மிதுனம்

உடல் நலனில் கவனம் தேவை, நட்பு பகையாகாதிருக்க நிதானம் தேவை, புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, பிரயாண பயமுண்டு.


கன்னி

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்பார்த்த தனவரவுகள் வந்து சேரலாம், பிள்ளைகளின் கல்வி நலனில் அக்கறை காட்டுவீர்கள்.


தனுசு

எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, புதிய சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள்.


மீனம்

இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு வீட்டுத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடவுளே மனிதனாகப் பிறந்தாலும் பணம் அவசியம்**




சிங்கர் காட்சியறை கடந்த 8 ஆம் திகதி செவ்வாய்கிழமை பளையில் திறந்து வைகக்பட்டது. இந் நிகழ்வில் சிங்கரின் சந்தைப்படுத்தல் அதிகாரி ஜன்மேஷ் ஆண்டனி பிராந்திய சந்தைப்படுத்தல் முகாமையாளர் ந. தயாளன் ஆகியோர் கலந்து கொண்டு காட்சியறையைத் திறந்து வைத்ததுடன் சேவைகளையும் ஆரம்பித்து வைத்தனர்.

# நவாலியில் வீட்டுடன் இணைந்திருந்த தொழிற்சாலை - தீயில் எரிந்து நாசம்



(சாவகச்சேரி)

நவாலி வடக்குப் பகுதியில் நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்ற தீ விபத்தில் வீட்டுடன் இணைந்திருந்த தொழிற்சாலை ஒன்று எரிந்து நாசமாகியுள்ளது.

இந்நிலையில் கிராம மக்கள் இணைந்து தீயினைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மின் கசிவு காரணமாக இவ் விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. (8-30)

# யோகாப் பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக் கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல -81 பிறவுண்வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத்திருக் கோவிலில் ஆரம்பமாகவுள்ளது.

சக்கரை நோய் கட்டுப்பட, ஆஸ்துமா சளி தொல்லை நீங்க, இரத்த அழுத்தம் கட்டுப்பட தூக்கம் சம்பந்தப்பட்ட பிரச்சினை தீர, தைராய்டு பிரச்சினை தீர எளிய முறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், உயிர் வளத்திற்கான காயகல்பப் பயிற்சிகள் மற்றும் சூரிய நமஸ்காரம் ஆகிய அடிப்படை பயிற்சிகள் என்பன கற்றுத்தரப்படும்.

14 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் இதில் கலந்து கொண்டு பயன்பெறலாம். பயிற்சிகளை தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் வா.வள்ளி வழங்குவார்கள்.

மேலதிக தகவல்களுக்கு 021 222 2772 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியுமென தெரிவித்துள்ளனர். (3)

# தென்னிந்திய பிரபல பாடகர் ஸ்ரீநிவாஸ் பங்கு பெறும் இசை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தென்னிந்திய பிரபல பாடகர் ஸ்ரீநிவாஸ் பங்குபெறும் இசை நிகழ்ச்சி யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை மாலை ஆறு மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ் .பல்கலைக்கழ மருத்துவபீட மாணவர்களின் போக்குவரத்து வசதிகளுக்காக பேருந்து ஒன்றை கொள்வனவு செய்வதற்காக நிதியை திரட்டும் முகமாக குறித்த இசை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி தகவலினை யாழ். ஊடக அமையத்தில் அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் ஒன்றியத்தின் தலைவர் மகேந்திரன் சங்கீதன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழ மருத்துவ பீடாதிபதி இ.சுரேந் திரகுமாரன் ஆகியோர் இதனை தெரிவித்தனர். (நி-8-33)

# பாலர் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

உடுவில் இந்து இளைஞர் மன்றம் நடத்தும் "பாலர் செயற்பட்டு மகிழ்வோம்" நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1:30 மணிக்கு யா/ உடுவில் மான்ஸ் மகாவித்தியாலய மைதானத்தில் உடுவில் இந்து இளைஞர் மன்றத் தலைவர் தி. தியாகச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் ஓய்வு நிலை பேராசிரியர் க. தேவராஜா, சிறப்பு விருந்தினராக யா/ உடுவில் மான்ஸ் மகாவித்தியாலய அதிபர் திருமதி. சௌந்தரராணி பாலநிகேதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (3)

நயினாதீவு பிரதேச வைத்தியசாலையின் புதிய வெளி நோயாளர் பிரிவு (OPD) கட்டட திறப்பு விழா நேற்றைய தினம் இடம் பெற்றது.



சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், பாராளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், ஸ்ரீபவானந்தராசா ஆகியோர் திறப்பு விழாவில் கலந்து கொண்டிருந்தனர். (படம்- சிவசாந்தன்)

# சவாரிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை சவாரி பிரியர்களின் ஏற்பாட்டில் மாபெரும் சாவாரிப் போட்டி எதிர்வரும் ஜூலை 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அராலி பூனாவோடை சாவரித்திடலில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் பங்குபற்றி வெற்றிபெறும் காளைகளின் உரிமையாளர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

முதலாமிடம் பெறும் காளைகளுக்கு சவாரி வண்டில் பரிசாகவும் இரண்டாமிடம் பெறும் காளைகளுக்கு 43 இஞ்சி அளவுடைய தொலைக்காட்சி பெட்டியும் மூன்றாமிடம் பெறும் காளைகளுக்கு நீரிறைக்கும் இயந்திரமும் வழங்கப்படவுள்ளது. பங்குபற்றும் காளைகளுக்கு ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. இந்த மாபெரும் சவாரிப் போட்டிக்கு இரசிகர்களை பங்கேற்று ஆதரவளிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

# புதிய நிர்வாகத் தெரிவு

(சாவகச்சேரி)

கொடிகாமம் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அலுவலர் மற்றும் பொருளாதார உத்தியோகத்தர் முன்னிலையில் இடம்பெற்றிருந்தது.

இந் நிகழ்வில் புதிய தலைவராக சு.குமரகுரு, செயலாளராக சி.கிருஷ்ணந் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (8-30)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 350 | 350 | 320 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 300 | 450 | 350 | 400 |
| தக்காளி | 180 | 250 | 250 | 150 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 300 | 250 |
| கோவா | 300 | 400 | 450 | 300 | 400 |
| கரட் | 400 | 500 | 450 | 370 | 400 |
| பூசணி | 120 | 150 | 150 | 120 | 150 |
| புடோல் | 100 | 150 | 200 | 100 | 200 |
| வாழைக்காய் | 100 | 120 | 120 | 80 | 150 |
| சின்ன வெங்காயம் | 350 | 150-350 | 350 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 180 | 120 | 120 | 150 |
| பாகற்காய் | 500 | 600 | 700 | 600 | 600 |
| வெண்டக்காய் | 200 | 150 | 200 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 300 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 300 | 200 | 300 | 300 | 250 |
| லீக்ஸ் | 300 | 300 | 350 | 250 | 300 |
| பீற்றூட் | 250 | 200 | 350 | 240 | 250 |
| கறிமிளகாய் | 600 | 600 | 700 | 550 | 600 |
| முருங்கைக்காய் | 500 | 500 | 700 | 420 | 500 |
| போஞ்சி | 400 | 450 | 600 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 250 | 250 | 350 | -- | 300 |
| கீரை – 1 பிடி | 80 | 60-120 | 100 | 50 | 100 |
| தேசிக்காய் | 300 | 300 | 300 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 160 | 150 | 150 | 80-150 | 120-150 |
| இராசவள்ளி | 600 | 650 | 600 | 580 | 600 |
| வெங்காயப்பூ | 450 | 400 | 600 | -- | 600 |
| முள்ளங்கி | 200 | 160 | 200 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | 100 |
| ஈரப்பலா | 150 | 150 | 80 | -- | 250 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குருசேத்திரம்

-விதுரன்

# செல்வந்தர்களின் உறக்கத்தைக் கலைக்கின்ற சர்வதேச நாணய நிதியம்

'நாடு அநுரவோடு' இது தேசிய மக்கள் சக்தியின் பொதுத்தேர்தல் பிரசாரத்தின் மகுடவாசகம்.

ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்த வெற்றியைத் தொடர்ந்து உசாரடைந்த தேசிய மக்கள் சக்தி, பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெற்று ஆட்சிக்கு வந்தது.

தேசிய மக்கள் சக்தியின் வெற்றி என்பது தர்மத்தின் வெற்றியாகவே பார்க்கப்பட்டது.

ஆம், ஆட்சி அதிகாரத்தில் இருந்தவர்கள் ஊழல் செய்ததன்



காரணமாக இலங்கைத் திருநாடு எல்லா வளத்தையும் இழந்து உலகில் பிச்சை எடுக்கும் நாடாயிற்று.

உண்மை. இப்போது சர்வதேச நாணய நிதியம் (IMF) இலங்கைக்கு உதவி செய்யாவிட்டால், உலகின் இரண்டாவது எதியோப்பியாவாக இலங்கை உருவாகியிருக்கும்.

அந்தளவிற்கு இலங்கையின் பொருளாதாரம் அதல பாதாளத்தில் வீழ்ந்துள்ளது.

அதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் உதவி என்பது; சர்வதேச நாணய நிதியம் விதித்த நிபந்தனைகளும் ஆலோசனைகளுமேயன்றி வேறில்லை எனலாம்.

இதை நாம் கூறும்போது இஃது என்ன? என்று உங்களில் பலர் கேட்கலாம், ஆனால் உண்மை அது தான்.

இலங்கையின் வறுமை என்பது அரசாங்கத்தின் வறுமையேயன்றி ஒட்டுமொத்த மக்களின் வறுமையல்ல.

அதாவது மக்கள் சமூகத்தில் ஒரு பகுதியினர் மிகப்பெருத்த செல்வந்தர்களாக உள்ளனர். அவர்களிடம் செல்வம் குவிந்துள்ளது.

ஆக, இலங்கை அரசாங்கத்திடமும் சாதாரண ஏழை மக்களிடமும் செல்வம் இல்லை என்பது தான் இலங்கையின் வறுமையாகும்.

இதற்குப் பல உதாரணங்களைக் கூற முடியும். அதில் ஒன்று இந்த நாட்டின் முதல் தர பணக்காரரான தம்மிக்க பெரேரா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு அந்தப் பதவியை தனதாக்க வேண்டுமென விரும்பினார்.

தான் ஜனாதிபதியாக வந்தால், இலங்கை பட்ட அத்தனை கடனையும் தனது பணத்தில் அடைத்து விடுவேன் என்றார்.

அதாவது இலங்கைத் திருநாட்டின் ஒரு பிரஜையால் மட்டும் இலங்கை பட்ட கடனை அடைக்க முடியும் என்றால், மகன் வசதியாக இருக்கின்றான்; ஆனால் அவனைப் பெற்ற தாய் ஒருவேளை உணவுக்கு வழியின்றி ஏங்குகின்றாள் என்ற நிலைமை தான்.

இங்கு தான் தேர்தல் அரசியல், ஊழல் ஆட்சி என்பன காரணமாக அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய வரி வருமானங்கள் மற்றும் இதர கொடுப்பனவுகள் ஏமாற்றப்படுகின்றன.

இதையும் கடந்து, அந்த ஏமாற்றங்களுக்குள் ஊழல், இலஞ்சம் என்ற நோய் நாடு முழுவதையும் ஆக்கிரமித்து விட, நாட்டின் கஜானா வெறுமையாகியது.

இங்கு தான் சர்வதேச நாணய நிதியம் நிபந்தனைகளை பட்டியல்படுத்துகிறது.

உயர்ந்த வருமானம் பெறுகின்றவர்களிடம் இருந்து உயர்ந்த வரியை அறவிட வேண்டும்.

மக்களின் உழைப்பின் ஒரு பகுதி நாட்டிற்கு வந்தாக வேண்டும்.

இதற்காக வருமான வரி, பெறுமதி சேர்வரி, இறக்குமதித் தீர்வைகள் அதிலும் ஆடம்பரப் பொருட்கள் மற்றும் ஆடம்பர வாகனங்களுக்கான தீர்வைகள் என்பன உச்சமாக்கப்பட்டன.

இதையும் கடந்து, 18 வயதைப் பூர்த்தி செய்த ஒவ்வொரு பிரஜையும் தனக்கான ரின் நம்பரைப் (TIN) பெற்றுக் கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ரின் நம்பரைப் பெறுவது கட்டாயமாக்கப்பட்ட போதிலும் எங்களின் வழமையான தாமத குணம் ரின் நம்பர் பெறுவதிலும் தனது வேலையைக் காட்டியது.

இங்குதான், வங்கி வைப்புக்களில் கிடைக்கக்கூடிய வட்டி வருமானத்தில் பத்து வீதத்தை அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனை நிறைவேற்றப்படுகிறது.

எனினும் ரின் நம்பரைப் பெற்றுக் கொண்டு அதனை உறுதி செய்தால், வங்கி வைப்பின் வட்டியில் பத்து வீதத்தை மீளப் பெற முடியும் என்ற அறிவிப்பு இறைவரித் திணைக்கள அலுவலகத்தில் மக்களை திரள வைக்கிறது.

இதற்கும் மேலாக, சொத்து வரிகளை அமுல்படுத்துவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. 2027 ஆம் ஆண்டில் சொத்து வரிச்சட்டம் அமுலுக்கு வரும் போது இலங்கை நாட்டின் திறைசேரி நிரம்பவே செய்யும்.

இங்கு தான் ஓர் அரசாங்கமாகத் தனித்துச் செய்ய முடியாதது சர்வதேச நாணய நிதியத்தின் பேரால் நிறைவேற்றப்படுகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள், ஆலோசனைகள் இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதாக இருந்தாலும் இந்த நாட்டின் செல்வந்தர்களின் உறக்கம் கலைக்கப்படுகிறது என்ற உண்மையும் இங்கு குறிப்பிடத் தக்கது.


அதேவேளை கடந்த கால ஆட்சியாளர்கள், அமைச்சர்கள் என ஊழல் புரிந்தவர்களை கைது செய்கின்ற படலமும் சமாந்தரமாக அரங்கேறுவதன் காரணமாக 'நாடு அநுரவோடு' என்பதும் சாத்தியமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

## சட்டவிரோதக் கட்டடங்களை உடைத்தெறிய வேணும்



வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** கிளீன் ஸ்ரீலங்கா என்ற நிகழ்ச்சித் திட்டம் எங்கட வட மாகாணத்திற்கு செல்லாதோ.

**மூப்பர்:-** ஏன் விதானையார் அப்படிக் கேட்கிறியள்.

**விதானையார்:-** கிளீன் ஸ்ரீலங்கா என்றால், ஒரு வித்தியாசம் தெரிய வேணும். ஆனால் எங்கட இடங்களில இப்பவும் வீட்டுக் குப்பைகளைத் தெருவில கொட்டுகிறம் எண்டால், பிற கென்ன கிளீன் ஸ்ரீலங்கா.

**சாத்திரியார்:-** விதானையார் சொல்லுறதில உண்மை இருக்கத்தான் செய்யுது. கந்தர்மடம் சந்தியில இருந்து நல்லூர்ப் பக்கமாக அரசடி வீதியில இப்பவும் கழிவுகளைக் கொட்டுகினம்.

உரப்பைகளில கட்டிக் கொண்டு வந்து அந்த இடத்தில கழிவுகளைப் போட, அவற்றைத் தெரு நாய்கள் தரம் பிரித்து அந்த வீதி முழுவதும் பரவி வைக்குதுகள்.

அதால அந்தப் பகுதியில குடியிருக்கிற மக்களும் அதால போய் வாறவர்களும் கடும் அசௌகரியங்களைச் சந்திக்கினம். அது போல நல்லூர் இளம் கலைஞர் மண்டபத்திற்கு அருகில, அரச மரக் கூட்டுத் தாபனம் அமைந்துள்ள இடத்திற்கு முன்னால ஏகப்பட்ட குப்பை கூழங்கள் கொட்டப்படுகின்றன.

இப்படிப் பல இடங்களைச் சுட்டிக் காட்டலாம்.

**கங்காணி:-** இது ஒருபுறம், மறுபுறத்தில எங்கட வீதி ஓரங்களை ஒருக்காப் பாருங்கஎன் - முந்தியெல்லாம் வீதியின்ர இரு மருங்கிலும் உள்ள புல்லுகள், செடிகள் வெட்டித் துப்புரவு செய்யப்படும்.

மழை பெய்கிற போது, றோட்டில விழுகிற மழை நீர், இரு பக்கமும் வழிந்தோடி இருகரையிலும் உள்ள மண்ணில ஊறிக் கொள்ளும். ஆனால் இப்ப வீதியின்ர ஓரங்கள் வெட்டப்படுவதும் இல்லை. இது தொடர்பில உரிய அமைப்புக்கள் கவனம் செலுத்தவதும் இல்லை.

**சிறாப்பர்:-** கங்காணியார் சொல்லுறது உண்மை தான். காப்பெற் வீதிகள் உள்ள இடங்களில கூட வீதியின் இரு பக்கங்களும் துப்புரவு செய்யப்படாமல் இருப்பதைக் காண முடிகிறது.

அதிலும் யாழ்ப்பாண நகரப் பகுதியில உள்ள வீதியோரங்களில பாதீனியச் செடிகள் வளர்ந்திருப்பதை அவதானிக்கலாம்.

முன்பு கோப்பாய் இராசபாத வீதியில தான் பாதீனியச் செடிகள் கண்டபாட்டில முளைத்திருந்தன.

ஆனால் இப்ப யாழ்ப்பாண நகரப் பகுதியில கூட வீதியோரத்தில பாதீனியச் செடிகள் முளைத்திருக்குது.

வடக்கு மாகாண சபை ஆட்சியிருந்த காலத்தில, விவசாய அமைச்சராக இருந்த பொ.ஐங்கரநேசன் அவர்கள் பாதீனியத்தைக் கட்டுப்படுத்த வேணும் எனக் கடுமையாகப் பாடுபட்டார்.

ஆனால் இப்ப ஒருத்தரும் அதைப் பற்றி நினைப்பதும் இல்லை. கதைப்பதும் இல்லை.

**வாத்தியார்:-** உண்மையில எங்கட சுற்றாடல் குறித்து நாங்கள் கவலைப்பட வேணும். உலகம் எங்கேயோ போய்விட்டது. ஆனால் நாங்கள் இப்பவும் வீட்டுக் குப்பை கூழங்களை வீதியில கொட்டுறம்.

இதில இருந்து எங்கட மக்களின்ர மன நிலை எப்படியிருக்கிறது என்பது தெரியுது தானே.

உண்மையில எங்கட உள்ளூராட்சி அமைப்புகள் கழிவகற்றல் முகாமைத்துவத்தில உச்சமான சேவையை வழங்குகினம்.

ஆனால் அதற்குப் பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்குவதாகத் தெரியவில்லை.

இப்பவும் சில உணவுச் சாலைகள் மற்றும் ஹோட்டல்களில சேருகிற கழிவு நீரை வீதியில விடுகிற சம்பவங்களும் நடந்து கொண்டு தான் இருக்குது.

**பண்டிதர்:-** சொன்னாப் போல, யாழ்ப்பாண நகரில குறிப்பிட்ட சில வர்த்தக நிலையங்கள் வீதிகளை ஆக்கிரமிக்கிற நோக்கில சீமெந்தால கடை வாசலை நீட்டியிருக்கினம்.

அதேநேரம் சில கடைகள் அவ்வாறு செய்வது தடுக்கப்படுகுது.

இங்க தான் ஒரே சட்டத்தை அனைவருக்கும் பயன்படுத்த வேணும். இதைவிடுத்து, செல்வாக்குக் கலாசாரம் வேலை செய்தால் எல்லாம் அம்போ எண்டு தான் போகும்.

ஆகையால வட பகுதியில உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளும் தத்தம் பிரதேசங்களில உள்ளூராட்சி சபைச் சட்டத்தை முழுமையாகப் பிரயோகிக்க வேணும். அப்ப தான் எங்கும் ஒரே சட்டம் அமுலாகும்.

**மூப்பர்:-** பண்டிதர் சொல்லுறது உண்மைதான்.எங்கட மண்ணில இப்ப இருக்கிற பெரிய பிரச்சினை, மழை வெள்ளம் வடிந்தோடுவதில் இருக்கிற சிக்கல் தான்.

அனுமதி எடுக்காமல் சுற்றுமதில்களைக் கட்டுவது. வெள்ள வடிகால்களை இடைமறித்து கட்டடம் கட்டுவது போன்ற காரியங்களால எங்கும் வெள்ளம் தேங்குகின்ற நிலைமை ஏற்படுகிறது.

ஆகையால சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட அத்தனை கட்டுமானங்களும் உடைக்கப்பட வேணும்.


அப்போது தான் எங்கட பிரதேசத்தை கிளீனாக வைத்திருக்க முடியும்.

இவ்வாறு மூப்பர் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணி மனிதப் புதைகுழி ஈழத்தமிழினத்தின் இருண்ட யுகம்









அபிமன்யு

புலம்பெயர் ஈழத்தமிழர்களைப் பார்த்து "நீங்கள் உங்களது சொந்த நாட்டை விட்டு ஏன் புலம்பெயர்ந்தீர்கள்" என்ற கேள்விக்கு விடையாக செம்மணி மனிதப் புதைகுழி விரிந்து நிற்கிறது.

ஈழத்தமிழர்களுக்கும் யூதர்களுக்கும் நிறையவே ஒற்றுமைகள் இருக்கிறது.

யூதர்கள் பலசாலிகள், புத்திசாலிகள் உலகின் பல பாகங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

ஆயினும் யூத இனம் இரண்டாம் உலக யுத்தத்தில் திட்டமிட்டு இனப்படுகொலை செய்யப்பட்டதான உண்மை எம்மில் எத்தனை பேருக்குத் தெரியும். உலக சர்வாதிகார சக்தியான ஹிட்லர் ஜேர்மனின் ஆட்சி அதிகாரங்களுக்கு வந்த பின்னர் யூதர்கள் திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்டார்கள்.

அக்காலத்தில் சுமார் 6 மில்லியன் யூதர்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்பதை நினைக்கும் போது நெஞ்சம் பதைபதைக்கிறது.

எந்தவித சம்பந்தமும் இல்லாமல் வெறும் யூத வெறுப்பு கொள்கையைப் பின்பற்றி சுமார் இரண்டாயிரம் வதை முகாம்களை உருவாக்கி அதில் யூதர்களை அடைத்து சித்திர வதை செய்து அவர்களின் உயிரை எடுத்தது ஹிட்லரின் அரசு.

யூதர்கள் அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், அர்ஜென்டினா, அவுஸ்திரேலியா, கனடா, ஜேர்மனி, ஐரோப்பா போன்ற நாடுகளில் பரவியிருந்தாலும் இஸ்ரேல் யூதர்களின் தனி நாடாக மிளிர்ந்து நிற்கிறது.

இஸ்ரேல் அமெரிக்காவின் செல்லப்பிள்ளை என்று கூறப்படுவதற்கான காரணம் யாதெனின், அமெரிக்காவுக்கு, தான் வல்லரசாக இருப்பதற்கு மூளை தேவை. அந்த மூளை யூதர்களிடம் நிறையவே இருக்கிறது. அதை அமெரிக்கா நன்கு பயன்படுத்துகிறது.

அமெரிக்காவின் மிகப்பெரிய நிறுவனங்களான நாசா உள்ளிட்ட பல நிறுவனங்களில் யூதர்களின் வகிபாகம் 80 விகிதத்திற்கு அதிகம் என்றால் உங்களால் நம்பமுடிகிறதா? ஆயினும் அதுதான் உண்மை.

சக்திமிக்க, பலமுடைய, அறிவாற்றலுடைய யூத இனம் எவ்வாறு நாசிகளால் படுகொலை செய்யப்பட்டதோ அதேபோல ஈழத்தமிழினமும் படுகொலை செய்யப்பட்டது.

அவர்களின் பூர்வீகங்கள் சிதைக்கப்பட்டது. அவர்களின் வரலாறுகள் சூறையாடப்பட்டது.

1980களுக்கு முற்பட்ட காலங்களில் இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும் அரச, தனியார் அலுவலகங்களில் ஈழத்தமிழர்களின் வகிபாகம் கோலோச்சி இருந்தது என்பதை எவரும் மறைத்துவிட முடியாது.

ஈழத்தமிழினத்தின் உச்சநிலை தொடர்பில் ஒரு பெரியவர் கூறும் போது "1980களில் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் இருந்து கொழும்பு சென்றால், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரையான அனைத்து புகையிரத நிலையங்களின் பெயர்ப்பலகைகளும் தமிழர் பெயரையே தாங்கி நிற்பதைக் காணமுடியும்" என்றார்.

ஆயினும் இன்றைய நிலை தலைகீழாக மாறியிருப்பதைக் காணமுடிகிறது.

யூத இனத்திற்கு என்ன நடந்ததோ அதுவே ஈழத்தமிழினத்துக்கும் நடந்தேறியது.

இலங்கையில் நடந்த போரின் கொடுமை ஈழத்தில் வாழமுடியாத நிலையில் எங்கு செல்வது என்று தெரியாமல் ஈழத்தமிழினம் புலம்பெயரத் தொடங்கியது.

இன்று உலகில் ஈழத்தமிழினம் இல்லாத நாடு இல்லை என்ற அளவில் நிலை இருக்கின்றதாயினும் செம்மணிப் புதைகுழி ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்களின் சாட்சியாய் எழுந்து நிற்கிறது.

சர்வதேசமே எனது சொந்த நாடான இலங்கையில் இருந்து நான் ஏன் புலம்பெயர்ந்தேன் என்று கேட்டாயே?. அதற்கான விடை இதோ! செம்மணி மனிதப் புதைகுழி!

இனவன்மம் மிக்கவர்களின் கைகளில் ஆட்சி அதிகாரங்கள் இருந்தால் அந்த நாடு சுடுகாடாய் மாறும் என்பதற்கு செம்மணி மனிதப் புதைகுழி தகுந்த சாட்சியமாகிறது.

வளம்மிக்க எமது நிலம் வன்மம் மிக்கவர்களால் சுடுகாடாக்கப்பட்டிருக்கிறது.

இவை அனைத்தும் தமிழினம் என்ற ஒரே ஒரு காரணத்துக்காய் நடந்தது. யூத இனத்துக்கு நடந்த அதே அநீதி இன்று தமிழினத்துக்கு நடந்திருக்கிறது.

யூத இனம் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை நெஞ்சுரமாய்க் கொண்டு வளர்ந்து, உச்சம் பெற்று நிற்கின்றதாயினும் காசாவில் அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று குவித்து தமக்கான பாவத்தை மீண்டும் சேர்த்துக் கொண்டிருக்கிறது.

ஈழத்தில் காணாமல் போன தமது உறவுகளுக்கு நடந்தது என்ன என்ற பதிலை அரசாங்கம் எமக்குக் கூறவேண்டும் என்று, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் மனிதப் புதைகுழித்திடலில் நின்று கேட்பது வலி மிகுந்தது.

அந்த வலியை உணர்ந்து கொண்டு அவர்களுக்கான நீதியை வழங்க வேண்டியது சம்பந்தப்பட்டவர்களின் கடமை.

செம்மணி மனிதப் புதைகுழி சர்வதேசத்தின் பார்வையில் நடைபெறுவதை தொடர்ந்து உறுதிப்படுத்த வேண்டும்.

ஏனெனில், செம்மணிச் சித்துப்பாத்தி மயானத்தின் நிர்வாகசபை உறுப்பினருக்கு இனந்தெரியாதவர்களால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. அவரே குறித்த மனிதப் புதைகுழி தொடர்பில் நீதிமன்றை நாடியவர்.

அண்மையில் அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது தனக்கு பாரிய அச்சுறுத்தல் இருப்பதாகவும் எந்த நிலையிலும் எனது நிலையில் இருந்து பின்வாங்கப் போவதில்லை என்றும் கூறியிருக்கிறார்.

அவ்வாறெனின், அவரை அச்சுறுத்துபவர்கள் யார் என்ற கேள்வி எழுந்துள்ளது.

செம்மணிப் புதைகுழியின் காலம் 25 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கலாம் என கருதும் நிலையில் இதற்கு அச்சுறுத்தல் விடுவது யார் என்பது புரியாத புதிராகவே உள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தை மறைக்கும் வகையில் பாரிய செயற்திட்டம் திரைமறைவில் நடக்கின்றதோ என்ற அச்சம் தமிழ் மக்களிடம் எழுந்துள்ளது.

இங்குதான் நாம் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும்.

அதாவது, சர்வதேசத்தின் தலையீடின்றி எது நடந்தாலும் அது சுயாதீனமாய் இருக்காது என்பதை தமிழினம் பலமாக நம்புகிறது.

இந்த நம்பிக்கையீனத்தை சர்வதேசம் புரிந்துகொள்ள வேண்டும். செம்மணிப் புதைகுழி மர்மத்தை உலகறியச் செய்ய வேண்டும்.

அதனூடே தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். அப்போதுதான் செம்மணி மனிதப் புதைகுழியில் புதைந்து கிடக்கும் எமது உறவுகளின் ஆத்மா சாந்தியடையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதைகுழியின் ஓலங்கள்

உலகம் மறந்து தமிழ் இன ஓலம்
மீண்டும் கேட்குது புதைகுழி கிளறிட

உதிரம் கலந்த மண்ணின் மணமும்
உரிமை இழந்த இனத்தின் ரணமும்

செவிகளில் மீண்டும் கேட்டிட ஏனோ
விழிகளில் கண்ணீர் விதையுது இன்று

மண்ணில் உறங்கும் சாட்சிகள் யாவும்
கிளறிட குற்றம் அறிந்தனர் உலகில்

ஆண்டுகள் கடந்து தேடிய உறவுகள்
மண்ணில் புதைந்து கண்டிடும் போது

தாயகம் பிறந்த தமிழின மகனாய்
தவிக்குது நெஞ்சம் எம் இனம் எண்ணி

இத்தனை சான்றுகள் போதாதோ எம்
இனம் கேட்கும் நியாயம் கிடைக்க



**ந.விதுஷன் - கற்கோளம்**



# செம்மணியில் 'வெண்மணி'கள்

பால் வடியும் முகம் - பார்த்து
பாதகர் மனம் உருகலையோ...?
ஈன்றவள் இரங்கல் - கேட்டு
இதயம் இரங்கலையோ...?
இரக்க மிலா அரக்கர்களே - உங்களை
ஈன்றவளும் ஒரு தாய் தானே!

தர்ம புத்தர் போதித்தது
அதர்மத்தின் போதனையா...?

குழலினு மினிது மழலை மொழி - என்பார்
மழலையின் அழுகுரல்
கல் நெஞ்சை கரைக்கலையோ...?

செம்மணி மண்ணில் - அம்
மணிகள் சீரளித்தோர்
சீரில்லா வாழ்க்கை வாழ்ந்து சீரளிவர்

பதறுதய்யா நெஞ்சு
இதைக் கேட்க யாருமிலையோ...?

உணவுக்கு கையேந்தும்
காசா சிறுவர் முதல்,
உலகெங்கிலும் மனித நேயமில்லை
மனிதர்கள் அழிக்கப் படுகின்றார்

முன் நூறு கடவுள்கள்
முந்தைய காலம் இருந்த தாமே...?
அதிசயங்கள் அற்புதங்கள்
எல்லாம் நடந்த தாமே...
ஒரு கடவுளர் தனும்
ஒரு தரம் வாராரோ...?
அநியாய அரக்கர்களை,
அடியோடு சாய்க்காரோ...?

**சாந்தையூரிவன் - தி.ராம்குமார்**


# அன்பு வாசகர்களே!

உங்கள் அபிமான
சங்குநாதத்தில் நீங்களும்
எழுதலாம்...

☑ அரசியல் ☑ இலக்கியம்
☑ கவிதை ☑ கட்டுரை

**ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.**

ஆசிரியர், வலம்புரி - சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126


# கவிதைக் கலசம்

# எனது குழந்தை பயங்கரவாதி



நிலத்தில் விதைகளைத்தான்
நடுவர் எங்கள் நாட்டிலோ
பூவென்றும் பிஞ்சென்றுமான
ஈழக் குழந்தைகளைப்
புத்தகப் பையுடன் புதைப்பர்
குழந்தைகளைச் செல்வமென்பர்
எங்கள் நாட்டிலோ
இராணுவச் சீருடை தரித்து
குழந்தைகளுக்கு எதிராக யுத்தம்
செய்து அவர்களை
மண்ணுள் அடக்குவர்
குழந்தைகளைக் களஞ்சியம் என்பர்
எங்கள் நாட்டிலோ
குழந்தைகள் படிக்கும் புத்தகங்களை
ஆயுதங்கள் என்பர்
குழந்தைகளைத் தெய்வங்களென்பர்
எங்கள் நாட்டிலோ
குழந்தைகளை மாத்திரமன்றி
அவர்கள் கையிலுள்ள
பொம்மைகளையும்
பயங்கரவாதிகள் என்பர்

**தீபச்செல்வன்**



# ஏமாற்றம்


பசப்பான வார்த்தையினால்
பறிபோனது எம் மனமும்
பகல் இரவு பாராமல்
பயணித்தது எம் தவறே

பட்டறிவு இருந்த போதும்
பகுத்தறிந்து பார்த்தாலும்
விட்டெறிந்து நடந்த பின்னே
விரக்தி கொள்வதில் பயனுண்டோ

பேச்சி இங்கு பல்லக்கில்
தம்பி இப்போ பொடி நடையில்
பிழை சரி தெரிந்திருந்தும்
பிரித்து பார்த்து அறிந்திருந்தும்
பேதமையாய் இருந்து விட்டோம்

பட்டப் பகலிலும் எருமை தனை
பசுவாக பார்த்தது
யார் தவறு? அது எம்தவறே
எம்தவறை நாமே எண்ணும் போது
எமக்குள்ளே வெட்கத்தை
உணருகின்றோம் ஏமாற்றத்துடனே.

**பி.தங்கத்துரை**
**வித்தியாபுரம், ஒட்டுசுட்டான்.**




# உரமாய்ப் புதைந்தீரோ

பள்ளித் தோழி உயிரை
பகைவன் வண்டி பந்தாட
பட்டப்பகலில்,
பார்க்கச் சென்ற கிரிசாந்தியை
காமுகன் சோமனும்
காடையரும் சேர்ந்து
எல்லாமும் இல்லாமல்
ஆக்கினரே
அப்பாவை இழந்த நீ அம்மாவின்
அரவணைப்பில்
ஆசையாய் படித்து வந்தாய்
வெறியன் ராஜபக்ஷ
வெட்டி வெட்டி துண்டாக்கினோம்
உனையும் தம்பியையும் என்றானே
உன் அம்மாவையும்
உனக்கு உதவ வந்தவரையும்
கயிறு இறுக்கி கொன்றனரே
உங்களின் வேதனையை
உணரலாமேயன்றி
அனுபவித்தோர் நீரன்றோ
ஆண்டுகள் பதினாறாயினும்
ஆறுமோ எம் மனம்
மீளத்துயிலவில்லை - நீர்
மீண்டு வருகிறீர்
செம்மணியும் சித்துப்பாத்தியும்
உலகு உச்சரிக்கும்
பச்சைக் குழந்தையும்
பாலூட்டும் தாயவளும்
சிறியோரும் பெரியோரும்
உன்போல் உறவுகள்
அவ்வளாகத்தில் எத்தனையோ
எத்தனை எதிர்காலம் இதற்குள்ளே
வேறும் வெளி வரும்
புதைந்தோர் மீள
புதைத்தோர் முழிக்க
ஆண்டோர் கூண்டிலேற
புதுவிடியல் பிறக்க
நீங்கள், உரமாய் புதைந்தனரோ

**விநாயகர் சாந்தை**
**மு.ரமேஷ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெரியவர்களை மதிக்கும் தன்மை இப் போது இல்லாது போய்விட்டதே?






செம்மணிப் புதைகுழி விவகாரம்: சர்வ தேசத்தின் பார்வை இலங்கைப் பக்கம் திரும்பி விட்டதே?

**மரியாதை மனதில் இருக்கட்டும் என்று எதைச் சொல்கிறார்கள் வியாசரே?**

தவேந்து-வவுனியா

முன்பெல்லாம் ஒருவருக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்றால் எழுந்து நின்று அவருக்கான மரியாதையைக் கொடுப் போம்.

இப்போது யாருக்கும் மரியாதை கொடுக்க வேண்டும் என்றால் போனைப் பார்க்கா மல் அவரின் முகத்தைப் பார்த்துப் பேசி னாலே அது பெரும் மரியாதையாகக் கருதப் படும்.

அந்தளவிற்கு எமது சமூகம் பிறழ்ந்து விட்டது என்பது தான் கவலையளிக்கிறது.

**மாற்றம் என்பது மாறிக்கொண்டே இருக்கிறதே? அது எப்படி?**

ரிதுஷ்-வதிரி

உலகில் மாற்றமுறாத இரண்டு விட யங்கள் உண்டு.

ஒன்று, நாம் அன்றாடம் பயன்படுத்தும் சட்டைப்பின் (ஊசி) அது 1860 இல் எப்படி இருந்ததோ அப்படியே எந்த மாற்றமும் இன்றி இப்போதும் இருக்கிறது.

மற்றையது ஞாயிறு.

வெள்ளைக்காரனால் கொண்டு வரப் பட்ட காலத்தில் இருந்து எந்த மாற்றமும் இன்றி அப்படியே இருக்கிறது ஞாயிற்றுக் கிழமை.

**செம்மணிப் புதைகுழி விவகாரம்: சர்வ தேசத்தின் பார்வை இலங்கைப் பக்கம் திரும்பி விட்டதே?**

ராஜ்-யாழ்ப்பாணம்

சர்வதேசம் என்பது வெறும் மாயை. ஈழத்தில் நடந்த அதே கொடுமையை காசாவில் இஸ்ரேல் செய்து கொண்டிருக்கி றது.

ஆயினும் பலன், சர்வதேசம் வேடிக்கை பார்ப்பதாயே உள்ளது. ஆதிக்க சக்திகள் ஏதிலிகளை ஏது செய்தாலும் எவரும் கேள்வி கேட்க மாட்டார்கள்.

கோவில் திருவிழாவிற்கு காசு சேர்ப்பது போலத்தான் சர்வதேசமும். ஐ.நா அமர்வு நெருங்கும் போது பூச்சாண்டி காட்டும். அதன் பின் எல்லாம் அடங்கிவிடும்.

அடுத்த வருடம் அதே திருவிழா. அதே காசு சேர்ப்பு. அவ்வளவுதான்.

**பிள்ளை அழுகிறது என்று அதனிடம் தொலைபேசியைக் கொடுப்பது சரியான செயலா வியாசரே?**

இந்திரவதனா-வதிரி

எம்மில் பல பெற்றோர் விடும் மிகப் பெரிய தவறு இது. சிறுவர்கள் தொலைபேசியைப் பார்க்கும்போது அவர்களின் மூளை செயலி ழக்கும் அபாயம் அதிகம்.

அத்துடன் பயம், பதற்றம், விரக்தி, கோபம், குரோதம் போன்ற செயற்பாடுகள் பிள்ளை களிடம் இயல்பாகவே தொற்றிக் கொண்டு விடும்.

தமக்கு கரைச்சல் இல்லை என்பதற்காக பிள்ளையிடம் தொலைபேசியைக் கொடுக்கும் பெற்றோருக்கு அவர்களின் வாழ்க்கை அழிக் கப்படுவது தெரியாமல் போவது வேதனை.

அன்பு
வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய
கேள்விகளை
0076 097 3126
என்ற இலக்கத்திற்கு
SMS, Whats App செய்யுங்கள்

**ஊழல்வாதிகளின் கைதுகளை கேட்கும் போது காது இனிமையடைகிறதே வியா சரே?**

சிவம்-வதிரி

யாழ்ப்பாணத்தில் பிரபலமான கடை ஒன்றின் முதலாளி தனது ஊழியர்களிடம் கூறும் விடயம்.

“அடேய் கடலிலை தண்ணி எடுக்க வேணும் எண்டு ஆசைப்பட்டால் செம்பிலை எடுங்கடா. அதுக்காக கடலையே எடுக்க நினைச்சால் நான் என்னத்தையடா செய்ய” என்பாராம்.

அதுபோலத்தான் அதிகாரம் தங்களிடம் இருக்கிறது என்பதற்காக காசை அச்சடித்து அதை சொந்தமாக்க நினைப்பது எவ்வளவு கொடுமையானது.

உப்புத் தின்றவன் தண்ணீர் குடித்தாக வேண்டுமல்லவா?

**செம்மணிப் புதைகுழி கொடுமை களைச் செய்தவர்கள் நிம்மதியாக இருக் கிறார்களே?**

தமிழ்-யாழ்ப்பாணம்

அரசன் அன்று கொல்வான். தெய்வம் நின்று கொல்லும். எனக்குத் தெரிந்த குடும்பம் ஒன்று. இப்போது சரியான கஷ்டங்களை அனு பவிக்கிறார்கள்.

பணத்தேவையில் இருந்து மனதிற்கு மருந் திடும் தேவை வரை அவர்களுக்கான தேவை அதிகமாக இருக்கிறது.

ஆயினும் அந்த ஊரில் வசதியாக வாழ்ந்த குடும்பம் அது. ஏன் இன்று இந்த நிலை என்று ஒரு பெரியவரிடம் வினவினேன்.

இவர்களின் தாத்தா வீட்டில் ஒவ்வொரு நாளும் கிடாய் அடிப்பார் (வெட்டுவார்) செவ் வாய், வெள்ளி எதுவும் கிடையாது.

அந்தப் பாவங்கள் ஒன்று சேர்ந்து அந்தக் குடும்பத்தை உய்ய விடுகிற தில்லை என்று பெருமூச்சு விட்டார்.

**பெரியவர்களை மதிக்கும் தன்மை இப்போது இல்லாது போய்விட்டதே?**

மோகன்-சாவகச்சேரி

படையப்பா படத்தில் சிவாஜி தனது சொத் துக்கள் அனைத்தையும் தம்பி மணி வண்ணனுக்கு எழுதி வைத்துவிட்டு ரஜினி யைப் பார்த்து இனிமேல் உன் வழியில்தான் நாங்கள். முன்னுக்குப் போ என்பார்.

அதற்கு ரஜினி கூறுவார். அப்பா எண் டைக்குமே நீங்கதான் முன் வழி என்று.

இப்போதைய சமூகத்திற்கு என்ன ஆகி விட்டது என்றே தெரியாது. வீட்டில் தாய், தந்தை , பேரன், பேத்தி ஏன் இருக்கிறார்கள் என்றே தெரியாமல் இருபது வயது கடக்க முன்னர் சோடி பிடித்து மோட்டார் சைக்கிளில் ஊர் சுற்றுகிறார்கள்.

எல்லாம் சினிமாத்தனம் அவ்வளவுதான்.

**வியாசர் ஒரு விதானையாராக இருந் தால் எப்படி இருக்கும்?**

ராஜகோபால்-மந்துவில்

வியாசர் விதானையார் ஆகிய நான் வெயிலோ, மழையோ, புயலோ, பிள் ளையை பள்ளிக்கூடம் கொண்டு போகும் வேலையோ, மரக்கறிச் சந்தைக்குப் போகும் வேலையோ எதையும் பாராது நேரத்திற்கு அலுவலகத்தில் நின்று மக்கள் சேவை செய் வேன் என உறுதியளிக்கிறேன்.

ஏன் என்ர வாயைக் கிளறுகிறீர்கள். நான் எதையாவது சொல்லிவிட்டுப் போகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: திருவிளையாடல்
இயற்றியவர்: கவிஞர் கண்ணதாசன்
இசை: கே.வி. மஹாதேவன்
பாடியவர்: எம். பாலமுரளிகிருஷ்ணா



ஆ…ஆ…
ஒரு நாள் போதுமா இன்றொரு நாள் போதுமா?
நான் பாட இன்றொரு நாள் போதுமா?
நாதமா கீதமா – அதை
நான் பாட இன்றொரு நாள் போதுமா?
புதுநாதமா சங்கீதமா – அதை
நான் பாட இன்றொரு நாள் போதுமா?

ராகமா சுகராகமா கானமா தேவகானமா?
ராகமா சுகராகமா கானமா தேவகானமா? – என்
கலைக்கிந்தத் திருநாடு சமமாகுமா? – என்
கலைக்கிந்தத் திருநாடு சமமாகுமா?
நாதமா கீதமா அதை
நான் பாட இன்றொரு நாள் போதுமா?

குழலென்றும் பதபமப மபபமக கமமகரி ரிகரிஸ
காக்ரீஸ் நீதபமக
யாழென்றும் பா பம பதப பமப தபப பம
பதபபம பதபபம பத மபமத பதமப
கமகப மபகம ரிகரிம கமரிக
ஸரிநிதா ஸரிநிதா ஸரிநிதா
ஸரிநிதா ஸரிநிதா ஸரிநிதா

குழலென்றும் யாழென்றும் சிலர் கூறுவார் – என்
குரல் கேட்ட பின்னாலே அவர் நாணுவார்
குழலென்றும் யாழென்றும் சிலர் கூறுவார் – என்
குரல் கேட்ட பின்னாலே அவர் நாணுவார்
அழியாத கலையென்று எனைப் பாடுவார் ஆ..
அறியாமல் எதிர்ப்போர்கள் எழுந்தோடுவார் – எனை
அறியாமல் எதிர்ப்போர்கள் எழுந்தோடுவார் – எனை
அறியாமல் எதிர்ப்போர்கள் எழுந்தோடுவார்

இசை கேட்க எழுந்தோடி வருவாரன்றோ?
எழுந்தோடி வருவாரன்றோ?
எழுந்தோடி தோடி..
இசை கேட்க எழுந்தோடி வருவாரன்றோ?

எனக்கிணையாக தர்பாரில் எவரும் உண்டோ?
தர்பாரில் எவரும் உண்டோ தர்பாரில்…
எனக்கிணையாக தர்பாரில் எவரும் உண்டோ?

கலையாத மோகனச் சுவை நானன்றோ?
மோகனச் சுவை நானன்றோ? மோகனம் ஆ…
கலையாத மோகனச் சுவை நானன்றோ?
கானடா.. ஆ.. என் பாட்டு தேனடா இசை தெய்வம்
நானடா

# மின்சார விமானம்

## தொழில்நுட்பத்தில் பெரும் பாய்ச்சல்

எலெக்ட்ரிக் பைக், எலெக்ட்ரிக் கார், எலெக்ட்ரிக் சரக்கு வாகனங்கள் வரிசையில் இப்போது எலெக்ட்ரிக் விமானமும் வந்து விட்டது. அமெரிக்காவைச் சேர்ந்த பீட்டா டெக்னாலஜிஸ் (BETA Technologies) என்ற நிறுவனம் 2022 முதலே எலெக்ட்ரிக் விமானங்களைத் தயாரிப்பதில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. முதலில் சரக்கு மற்றும் மருத்துவ அவசர உதவிகளுக்கான எலெக்ட்ரிக் விமானங்களை இயக்குவதில் ஆர்வம் காட்டி வந்தது. இதைத் தொடர்ந்து 2024ஆம் ஆண்டு முதலே 4 பேர் பயணிக்கும் எலெக்ட்ரிக் விமானங்களை அறிமுகப்படுத்தி அதற்கான சோதனைகளில் ஈடுபட்டு வந்தது.

தற்போது உலகின் முதல் எலெக்ட்ரிக் பயணிகள் விமானத்தை வானில் வெற்றிகரமாகப் பறக்கவிட்டு விமான சேவை வரலாற்றில் புதியதொரு மைல்கல்லை வைத்துள்ளது. பீட்டா டெக்னாலஜிஸின் இந்த "Alia CX300" வகை எலெக்ட்ரிக் விமானம் அமெரிக்காவின் கிழக்கு ஹாம்ப்டன் முதல் நியூயோர்க் நகர ஜான் எஃப். கென்னடி விமான நிலையம் வரை 130 கிலோமீற்றர்கள் 30 நிமிடங்களில் 4 பயணிகளுடன் வெற்றிகரமாகப் பறந்திருக்கிறது. இப்போதைய எரிபொருளில் இயங்கும் விமானத்தைவிடவும் இந்த எலெக்ட்ரிக் விமான டிக்கெட்கள் 96% வரை விலை குறைவாக இருக்கும் என்று கூறப்படுகிறது. கிழக்கு ஹாம்ப்டன் முதல் நியூயோர்க் நகர ஜான் எஃப். கென்னடி விமான நிலையம் வரை சாதாரண விமானங்களுக்கு ரூ.13, 885 ($160) வரை டிக்கெட்விலை வசூலிக்கப்படுகிறது. ஆனால், இந்த எலெக்ட்ரிக் விமானத்தில் வெறும் ரூ. 694 மட்டுமே வசூலிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

சோதனை முறையில் இயக்கப்பட்டிருக்கும் இந்த எலெக்ட்ரிக் விமானங்கள் விரைவில் உலகின் பல பகுதிகளுக்குக் குறைந்த விலையில் பறக்கவிருப்பதாக பீட்டா டெக்னாலஜிஸ் நிறுவனம் சொல்கிறது. இது குறித்து அந்நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி கைல் கிளார்க், "இது 100% மின்சார விமானம். இதில் முதல் முறையாக 35 நிமிடங்களில் 130 கிலோமீற்றர்களைக் கடந்திருக்கிறோம். இந்த விமானத்தை சார்ஜ் செய்துவிட்டுப் பறப்பதற்கு மிகக் குறைந்த செலவேயாகிறது. மிகக் குறைந்த விலையில் உலகம் முழுவதும் எங்கள் எலெக்ட்ரிக் விமானங்கள் பாதுகாப்பாக விரைவில்




# கோட், சூட்டில் ஜெலன்ஸ்கி!

ரஷ்யாவுக்கு எதிரான போர் தொடங்கியது முதலே சூட் அணிவதைத் தவிர்த்துவந்த உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி, ரீசேட் அணிவதையே வாடிக்கையாக வைத்திருந்தார். உக்ரைனுக்காகக் களத்தில் சண்டையிடும் இராணுவ வீரர்களுக்குத் துணை நிற்பதற்காக, இராணுவ உடையைப் போல் டிசைன் கொண்ட ரீசேட்களையே அதிகம் அணிந்து வந்தார். சில மாதங்களுக்கு முன்பு வெள்ளை மாளிகையில் ட்ரம்பைச் சந்திக்க வந்த ஜெலன்ஸ்கியிடம், ஏன் நீங்கள் சூட் அணியவில்லை?" என்று கேள்வி எழுப்பினார் பத்திரிகையாளர் ஒருவர். அதற்கு, "இந்தப் போர் முடிந்தவுடன், சூட் உள்ளிட்ட நல்ல ஆடைகளை அணிந்து கொள்வேன்" என்று தெரிவித்தார் ஜெலன்ஸ்கி. இந்த நிலையில், நெதர்லாந்து நாட்டில் நடைபெற்ற நேட்டோ கூட்டமைப்பு மாநாட்டில், கறுப்பு கோட், சூட் அணிந்து கலந்துகொண்டிருக்கிறார் ஜெலன்ஸ்கி. "ரஷ்யா தாக்குதலைத் தீவிரப்படுத்தியிருப்பதால்,



எங்களுக்கு மேற்கத்தேய நாடுகள் உதவிகளை அதிகப்படுத்த வேண்டும்" என்றும் இந்த மாநாட்டில் கோரிக்கை வைத்திருக்கிறார்!

## 15 நாட்களில் 1,000 நிலநடுக்கங்கள்!

ஜப்பானின் தெற்குப் பகுதியில் அமைந்திருக்கிறது டொகாரா தீவுகள். இந்த டொகாரா தீவுப் பிரதேசத்தில், சிறிது சிறிதாக 12 தீவுகள் இருக்கின்றன. இந்த 12இல், ஏழு தீவுகளில் மட்டுமே மனிதர்கள் வசிக்கின்றனர். மொத்தமாகச் சுமார் 670 பேர் மட்டுமே இந்த ஏழு தீவுகளில் இருப்பதாகத் தெரிகிறது. கடந்த 15 நாட்களில் மட்டும் இந்தத் தீவில் சுமார் 1,000 முறை நிலநடுக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஜூலை 2 ஆம் திகதி அன்று, அதிகபட்சமாக 5.5 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டிருக்கிறது. இதுவரை ஏற்பட்ட நில நடுக்கங்களில் பெரும் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றாலும், எதிர்வரும் தினங்களில் பெரிய நிலநடுக்கம் ஏற்படுமோ என்ற அச்சம் நிலவுகிறது.

சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை என்றாலும், "தேவைப்பட்டால் அங்கிருந்து வெளியேறுவதற்குத் தயாராக இருக்க வேண்டும்' என மக்களுக்கு அரசு எச்சரிக்கை விடுத்திருப்பதால், அங்குள்ள மக்கள் தூக்கம் தொலைத்திருக்கின்றனர். டொகாராவின் சிறிய தீவான Akuseki தீவில் பெரும் அதிர்வுகள் உணரப்பட்டதால், அங்கு மொத்தமுள்ள 89 பேரையும் உடனடியாக வெளியேறுமாறு கேட்டுக் கொண்டிருக்கிறது ஜப்பான் அரசு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருக்க வேண்டாம்!





காலை நேரம் ரவி மெதுவாக கல்லூரியை நோக்கி நடந்து கொண்டு இருந்தான்.

அப்போது ஒரே சத்தம் காதில் சிறு சிறு கணிச்சாரு சத்தங்கள்.

அவன் விழிகள் அந்த சத்தத்தைத் தேடின. அருகிலிருந்த கூண்டின் உள்ளே சிறு சிறு குருவிகள் இரை தேடிக் கூவும் ஒலி.

வகுப்புக்குள் வந்த ரவிக்கு, மனதெங்கும் அந்த கூச்சல் குலுங்கிக் கொண்டே இருந்தது.

"யாராவது வந்து அவைகளை வெளியேற்ற வேண்டும்"

அவன் உள்ளம் பேசியது. ஆனாலும், அவன் மனம் அந்தக் குருவிகள் போலவே தான்.

ஒரு பாடகனாக உயர்ந்த பறவை ஆக விரும்பும் அவன்,

தன்னைச் சூழ்ந்த குடும்பக் கட்டுப்பாட்டால், வேறு துறையில் பயணிக்கின்றான்.

அசைவில்லா ஆசைகள் சிறகில்லா பறவைகளா?

அந்த நேரத்தில் ஒரு குரல்: "பேச்சுப் போட்டிக்கு யாராவது தயாரா?"

ரவிக்கு அது ஒரு சங்கு சத்தம் போல். கனவுக்குத் திடீர் அழைப்பு.

அவன் எழுந்து கேட்டான்: ஐயா பாடல் போட்டி ஏதேனும் இருக்கா?

ஆசிரியரின் சிறு சிரிப்பும்,

"இல்லை" என்ற பதிலும், கவிதை போலவே அவன் உள்ளத்தை வலியடித்தது.

கல்லூரி முடிந்தது. பேருந்திற்காக காத்திருந்தான்.

அவனது பார்வை மீண்டும் அந்த கூண்டை நோக்கிச் சென்றது. குருவிகள் இன்னும் கூச்சலிட்டுக் கொண்டு இருந்தன. சிறகடித்து பறக்கவிருக்கும் ஏக்கம்!

அந்தவேளை ஒருவர் வந்து கூண்டைத் திறந்தார். சிறு நொடியில்,

குருவிகள் சட சடவென வெளியில் பறந்தன! ரவிக்கு புரிந்தது. அவைகள் யாருக்காகவும் காத்திருக்கவில்லை அவைகளுக்கு வாய்ப்பு கிடைத்ததும், அவை பறந்துவிட்டன!

அவன் மீண்டும் கல்லூரிக்கு ஓட ஆரம்பித்தான் வாய்ப்பு தேடுவதற்காக அல்ல, வாய்ப்பை உருவாக்க.

# ஆச்சி அறிவுரை



## கடந்தகால கொடுமைகளின் சாட்சியம்; செம்மணிப் புதைகுழி

### பேராண்டி...

மாவை.நா.கஜேந்திரன்

செம்மணிப் புதைகுழி தொடர்பா நீ கவிதை வாசிச்சனி, நல்லா இருந்தது எண்டு உன்ர வகுப்பு ரீச்சர் கொம்மாட்டைச் சொன்னவாவாம். உன்ர கவிதை வரிகள் ஒவ்வொண்டும் உணர்வு பூர்வமா இருந்ததெண்டு பாராட்டினார் எண்டு கொம்மா சொல்ல ஒரு பக்கம் சந்தோசமா இருந்தாலும் மற்றப்பக்கம் மனது வலிக்குது.

தமிழினம் பட்டவலிகள் கொஞ்சநஞ்சமில்லை பேராண்டி. இலங்கை சுதந்திரம் அடைஞ்ச காலத்திலை இருந்து இண்டைக்கு வரைக்கும் தமிழினம் துயரப்பட்டுக் கொண்டுதான் இருக்குது.

செம்மணிப் புதைகுழி செய்தியைப் படிக்க தமிழினத்துக்கு நடந்த இன்னல்கள் மீண்டும் நினைவுக்கு வருகுது. கொத்துக் கொத்தா உடல் எச்சங்கள், தோண்டத் தோண்ட எலும்புக்கூடுகள் எண்டால், இந்தக் கொடுமைகளைச் செய்தவையின்ர மனநிலை எப்படிப்பட்டதா இருக்கும்.

பேராண்டி, செம்மணிப் புதைகுழி சிதிலத்துக்குள்ள ஒரு பொம்மை கிடந்ததெல்லோ? அதைப் பார்த்ததும் எனக்கு நெஞ்செல்லாம் பட படக்கத் தொடங்கிட்டுது. அந்தப் பொம்மை பாவனை 2000 ஆண்டு காலப்பகுதி வரைக்கும் புழக்கத்திலை இருந்தது பேராண்டி.

வீட்டின்ர சோக்கேஸ் பெட்டிக்குள்ள பார். அதேமாதிரி பொம்மை ஒண்டு இருக்குது. அது உன்ர கொப்பா சின்னப் பிள்ளையா இருக்கேக்குள்ள வாங்கினது. அது பத்திரமா இருந்தது. நீயும் அந்த பொம்மையைத் தான் விளையாடினனி. அதால அதை பத்திரமா வைச்சிருந்தவர் உன்ர தாத்தா. செம்மணிப் புதைகுழியிலை இருந்த அந்த பொம்மையைப் பார்க்க எனக்கு அடிவயிறு கருகிட்டுது பேராண்டி.

இதைவிட புத்தகப்பையோட ஒரு சின்னப் பிள்ளையின்ர எலும்புக்கூடு, பிள்ளையை அணைச்சு வைச்சிருந்தபடி ஒரு தாயின்ர எலும்புக்கூடு எண்டு அறிய, அறிய மனம் ஏம்பலிக்குது. எங்களுக்கு நீதி தாறத்துக்கு யாரும் இல்லை எண்டுறது வடிவாத் தெரியுது.

சும்மா சர்வதேசம் லேஞ்சியாலை கண்ணைத் துடைக்கிறதோட அவையின்ர காரியம் முடிஞ்சிடும்.

பேராண்டி: ஒரு இனத்தையே கருவறுத்திருக்கிறான்கள் கொஞ்சமும் ஈவிரக்கமில்லாமல் கொண்டு புதைச்சிருக்கிறாங்கள். இவங்களிட்ட மனிசப் பண்பு இருக்குமெண்டு நீ நினைக்கிறியா?

எங்களிட்டை சரியான தலைமை இல்லை. உடைஞ்ச கண்ணாடித் துண்டுகளாய் எல்லாரும் பிரிஞ்சு நிண்டு கொண்டு ஒற்றுமை பற்றிக் கதைக்கினம்.

அவைக்கு அவையின்ர அரசியல் வாழ்க்கை முக்கியம். சாகும் வரைக்கும் பதவியோட இருக்கவேணும் எண்ட சாத்திரத்தைப் புடிச்சு வைச்சிருக்கினம்.

இவர்களை நம்பினால் தமிழர் நடுத்தெருவிலைதான் நிக்கவேணும் எண்டுறது இப்ப சரியாத்தான் போச்சுது. ஆனால் செம்மணிப் புதைகுழி தமிழினத்துக்கு இழைக்கப்பட்ட இன்னல்களின்ர சாட்சியம் இதுதான் உண்மை.

**ஆச்சி வருவா...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கியம் உங்கள் கையில்...

**1. அதிகாலையில் விழித்தல்**

நம் உடலில் உயிரிக் கடிகாரம் உள்ளது. அந்த கடிகாரத்தைப் பின்பற்றி நடப்பது நல்லது. இதற்கு முதலில், அதிகாலையில் கண் விழிப்பதுதான் முக்கியம். அதிகாலையில் எழும்போது உடல் இயற்கையோடு இணைந்து இயங்கும். இதனால் உடலில் வளர்சிதை மாற்றம் சீராக நடக்கும். உடலுக்குப் புத்துணர்ச்சி கிடைக்கும். அன்றைய நாளை நன்றாகத் திட்டமிட்டு சிறப்பாகப் பயன்படுத்த முடியும்.

**2. நீர் அருந்துதல்**

காலை எழுந்ததும் பல் துலக்கி ஒரு கிளாஸ் வெந்நீர் அல்லது தண்ணீர் அருந்த வேண்டும். இது உடலுக்கு நீர்ச்சத்தை அளித்து, நச்சுக்களை வெளியேற்ற உதவும். மேலும், செரிமான மண்டலத்தைத் தயார்படுத்தவும், கொழுப்பைக் கரைக்கவும் உதவும்.

**3. காலைக்கடன்களை முடித்தல்**

கண் விழித்து, இரண்டு மணி நேரத்துக்குள் காலைக்கடனை முடிப்பது அவசியம். சிறுநீர் மற்றும் மலம் கழிக்கும் உணர்வு வந்த பிறகு, கழிப்பறைக்குச் செல்ல வேண்டும். அன்றாடம் உடலில் இருக்கும் நச்சுக்களை அகற்றாமல் உணவு உட்கொள்ளக் கூடாது.

**4. உணவு**

காலை உணவைத் தவிர்ப்பது கூடாது. அன்றைய தினத்துக்கான ஆற்றலைத் தருவது காலை உணவுதான். இரவு நீண்ட நேரம் உணவு இல்லாததால், வயிற்றில் அமிலம் அதிகமாக இருக்கும். இந்த சூழலில், காலை உணவைத் தவிர்த்தால் செரிமான உறுப்புகள் பாதிக்கப்படும், வளர்சிதை மாற்றம் சீராக நடக்காது.

**5. போதுமான அளவு தண்ணீர் அருந்துதல்**

ஒரு நாளைக்கு இரண்டு முதல் இரண்டரை லீற்றர் தண்ணீர் அருந்துவதை உறுதி செய்ய வேண்டும். போதுமான அளவு தண்ணீர் எடுக்கவில்லை எனில், உடலில் நச்சுக்கள் வெளியேறுவது பாதிக்கப்படும். சிறுநீரகக் கற்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகரிக்கிறது.

**6. தூக்கம் அவசியம்**

உணவு, உடற்பயிற்சி எந்த அளவுக்கு முக்கியமோ, அந்த அளவுக்கு தூக்கமும் அவசியம். இந்த நேரத்தில்தான் உடல் தன்னைத்தானே புதுப்பித்துக் கொள்கிறது, நச்சுக்களை வெளியேற்றுகிறது, அடுத்த நாள் புத்துணர்வுடன், ஆற்றலுடன் செயற்பட உடலைத் தயார்படுத்துகிறது.

**7. அலுவலகத்தில் ஜாக்கிரதை**

இன்றைக்கு அலுவலகத்தில் நாம் செய்ய வேண்டிய பணிகள் என்பதை அலுவலகத்துக்கு செல்லும் வழியிலேயே மனதுக்குள் லிஸ்ட் போட்டு நேரத்தை ஒதுக்கி வைத்துக்கொண்டால் தேவையற்ற மன அழுத்தத்தைத் தவிர்க்கலாம். கணினி முன் அமர்ந்து வேலை செய்பவர்களுக்கு ஏற்படும் பெரிய பிரச்சினை, முதுகு வலி, கழுத்து வலி, கண் பிரச்சினைகள் தான். இதற்கு உட்காரும் பொசிஷன்தான் முக்கியக் காரணம். எனவே சரியான பொசிஷனில் அமர்ந்திருக்கிறீர்களா என்பதை அடிக்கடி பரிசோதித்துக் கொள்ளவும். ஒரு மணி நேரத்துக்கு ஒரு முறை இரண்டு நிமிடக் குட்டி நடை போடுங்கள். அரை மணி நேரத்துக்கு ஒரு முறை அரை நிமிடம் கண்களை மூடி அமைதியாக இருங்கள்.

**8. நடைப்பயிற்சி - உடற்பயிற்சி**

உடலை ஃபிட்டாக வைத்திருக்க சில பயிற்சிகளை செய்ய வேண்டியது அவசியம். ஒவ்வொருவரும் அவர்களது வேலை நேரத்தைப் பொறுத்து 20 நிமிடங்கள் முதல் 45 நிமிடங்கள் ஒதுக்கலாம். நன்கு வியர்வை வரும் வகையில் உடற்பயிற்சி செய்வது அவசியம்.

**9. சிகரெட் - மது தவிர்**

சிகரெட், மது, போதைப்பொருள் பழக்கம் என ஏதாவதொரு கெட்டபழக்கம் இருந்தாலே ஆரோக்கியம் கெட்டுப் போய்விடும். எனவே இந்த இரண்டியும் அறவே தவிர்த்துவிடுங்கள்.


**10. சமூகத்தோடு இணைந்திடுங்கள்**

அவசியமான நேரங்களில், இணையம், சமூக வலைத்தளங்களை பார்ப்பதில் தவறு இல்லை. நீண்ட நேரம் அதில் மூழ்கி இருப்பதுதான் தவறு. எனவே, ஒரு நாளைக்கு ஒரு மணி நேரத்திற்கு மேல் பயன்படுத்துவதைத் தவிர்த்திடுங்கள்.

**11. பொது சுகாதாரம்**

ஆடைகளுக்கு அதிகம் முக்கியத்துவம் தர வேண்டும். தினமும் துவைத்து வெயிலில் காயவைத்த தூய்மையான ஆடைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும். ஒவ்வொரு நாளும் சுத்தமான ஆடைகளை அணிந்துள்ளீர்களா என்பதை செக் லிஸ்ட்டில் குறித்து வையுங்கள். ஒரு நாளைக்கு இரண்டு முறை குளிப்பது நல்லது.

# தயிரையும் மீனையும் சேர்த்துச் சாப்பிடக் கூடாது



தயிர் என்பது பொதுவாக சற்று மந்தத்தை உருவாக்கக்கூடிய உணவு. அதாவது செரிமானத்தை மந்தமாக்கும் உணவு. தயிர் சாப்பிடும்போது, கூடவே, மீன் அல்லது புரதச்சத்துள்ள உணவுகளை எடுக்கும்போது அவற்றின் சத்துகள் முழுமையாக உட்கிரகிக்கப் படாமல் போகவும் வாய்ப்பு உண்டு.

தயிருடன் மீன் மட்டுமல்ல, கடல் உணவுகள் எதையுமே எடுத்துக் கொள்வது சரியல்ல. தயிருடன் மீன் சேர்த்துச் சாப்பிடும்போது ஒவ்வாமை ஏற்பட வாய்ப்புகள் உள்ளதாக சித்த மருத்துவம் சொல்கிறது. குறிப்பாக, சருமம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் வரலாம் என்று சொல்லப்படுகிறது. தயிரில் உள்ள வேதிப்பொருட்களும், மீனில் உள்ள சத்துகளும் எதிர்வினையாற்றுகின்றனவா என்பதை ஆய்வு பூர்வமாகப் பார்க்க வேண்டும்.

மீன் உள்ளிட்ட கடல் உணவுகளைச் சரியாகச் சமைக்காவிட்டால் ஃபுட் பாய்சன் ஏற்பட வாய்ப்புகள் அதிகம். அந்த நேரத்தில் தயிரும் எடுக்கும்போது, செரிமானம் இன்னும் மந்தமாகி, அசௌகர்யத்தைக் கொடுக்கலாம். வாந்தி, வயிற்றுப்போக்கு உள்ளிட்ட பிரச்சினைகள் வரலாம் என்பதற்காகவும் இதைத் தவிர்க்க அறிவுறுத்தப்படுகிறது. இரவில் தயிர் சாப்பிட வேண்டாம் என அறிவுறுத்தப்படுவதும், அது ஏற்படுத்தும் மந்தத்தன்மையின் காரணமாகச் சொல்லப்பட்டதுதான். இரவில் எப்போதும் எளிதில் செரிமானமாகக்கூடிய உணவுகளைச் சாப்பிட வேண்டும் என்றே சொல்வோம்.

# சமைப்போம் சுவைப்போம்



## சோளம் கம்பு பூண்டு ரொட்டி

### தேவையானவை :



1. சோள மா – அரை கப்
2. கம்பு மா – அரை கப்
3. மிளகு – 6
4. பூண்டுத்தூள் – ஒரு டீஸ்பூன்
5. உப்பு, தண்ணீர் – தேவைக்கேற்ப


### செய்முறை

சோள மா மற்றும் கம்பு மாவை ஒரு பாத்திரத்தில் எடுத்துக்கொள்ளவும். அதில் பூண்டுத் தூள், நொறுக்கப்பட்ட மிளகு, உப்பு சேர்த்து நன்கு கலக்கவும். தண்ணீரைச் சிறிது சிறிதாகச் சேர்த்து மென்மையான மாவாகப் பிசையவும். சிறிய உருண்டைகளாகப் பிரித்து, தட்டையாகத் தேய்த்துக்கொள்ளவும். ஒரு கடாயைச் சூடாக்கி, ரொட்டியைப் போட்டு சுட்டெடுக்கவும். ஆரோக்கியமான சோளம் கம்பு பூண்டு ரொட்டி தயார். குருமாவுடன் சூடாகப் பரிமாறவும்.

**தமிழகத்தின் சில பகுதிகளில் பொங்கல் திருநாளன்று நாட்டுச் சோளமான வெண்சாமரச் சோளம் பயன்படுத்தப்படுவது வழக்கம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது கலாசாரத்தின் வெளிப்பாடு மிதிவண்டி



V.ஜனகன்
ரைடர்ஸ் ஹப் சைக்கிளிங் கழகம்

ஆசிய கலாசாரத்தில் மிதிவண்டிகளுக்கான இடம் என்றுமே புறக்கணிக்கப் பட முடியாதது. அவை போக்குவரத்து வழிமுறையாக மட்டுமல்லாமல் அன்றாட வாழ்க்கையில் சமூக தொடர்புகளின் இரண்டறக் கலந்த பகுதியாகும். இவை பெரும்பாலும் தனிநபர், குடும்பப் பயணங்கள், தொழிற் தேவைகள் போன்ற சமூக நிகழ்வுகளில் இரண்டறக் கலந்துள்ளது.

இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், நேபாளம் போன்ற பொது போக்குவரத்து குறைவாக இருக்கும் நாடுகளின் கிராமப்புறங்களில் இதுவே முதன்மை வாகனமாகும்.

பல ஆசிய சமூகங்களில் மிதிவண்டிகள் நடைமுறை மற்றும் கலாசார அடையாளத்தின் கலவை. மிதிவண்டி சுற்றுச்சூழலுக்கு பல நன்மைகளை வழங்கும் ஒரு குறிப்பிடத்தக்க போக்குவரத்து முறையுமாகும். இது கார்பன் வெளியேற்றத்தைக் குறைக்கவும், போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், காற்றின் தரத்தை மேம்படுத்தவும் உதவுகிறது. இது மோட்டார் வாகனங்களுக்கு சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றாக அமைகிறது.

குறைந்த தாக்கத்தை ஏற்படுத்தும் பயிற்சியாக, சைக்கிள் ஓட்டுதல் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது, மன நலனை மேம்படுத்துகிறது மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கு பங்களிக்கிறது. மேலும் தொற்றா நோய்களாக அறியப்பட்டு எமது சமூகத்தில் பெரும் தாக்கம் செலுத்துகின்ற சர்க்கரை வியாதி, குருதிக் கொழுப்பு அதிகரித்தல், இதய நோய்கள், மூட்டு வலிகள் மற்றும் குறிப்பிடக்கூடிய சிலவகை புற்றுநோய் போன்றவற்றுக்கு சைக்கிளோட்டுதல் ஒரு சிறந்த தீர்வாக அமைவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

வட-கிழக்கு மாகாணத்தை மையப்படுத்தி இயங்கிக் கொண்டிருக்கும், ரைடர்ஸ் ஹப் சைக்கிள் கழகம் கடந்த ஒரு தசாப்தமாக சைக்கிள் ஓட்டுதலை ஊக்குவிப்பதில் முக்கிய பங்கு வகித்து வருகிறது. சைக்கிள் ஓட்டுநர்களிடையே சமூக உணர்வை வளர்க்கும் வழக்கமான பயிற்சி அமர்வுகள், ஆரோக்கியத்திற்கான குழு சவாரிகள் நிகழ்வுகளை இக்கழகம் தினமும் தமது அங்கத்தவரிடையே ஏற்பாடு செய்கிறது. இதனால் அனைவருக்கும் சைக்கிள் ஓட்டுதல் எளிதாகக் கிடைக்கிறது. இக்கழகம் வளங்கள் மற்றும் ஆதரவை வழங்குவதன் மூலம் புதிய மற்றும் அனுபவம் வாய்ந்த உறுப்பினர்களை சைக்கிள் ஓட்டுதலில் ஈடுபட ஊக்குவிக்கிறது, இதன் மூலம் பிராந்தியத்தில் துடிப்பான சைக்கிள் ஓட்டுதல் கலாசாரத்தை வளர்க்கிறது.

எமது பிராந்திய சைக்கிளோட்டிகள் சாதாரண நியம சைக்கிள் பாவனையாளர்களாகவே உள்ளனர். ஆனால் உலக மாற்றத்தோடு ஒப்பிடுகையில் சாலை பைக்குகள் (Road Bike) தான் சர்வதேச பந்தயத்தைப் பொறுத்தவரை செல்வாக்கு செலுத்தி வருகின்றன. சாலை பைக்குகளுக்கும் நிலையான பைக்குகளுக்கும் இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடு உள்ளது. சாலை பைக்குகள் வேகம் மற்றும் செயற்திறனுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளன, இலகுரக பாரமின்றிய பிரேம்கள், குறுகிய டயர்கள் மற்றும் ஏரோடைனமிக் எனும் காற்றுடன் இயங்கும் நிலைகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. அவை எமது பாதை பரப்புகளுக்கமைய பந்தயத்திற்கு ஏற்றவகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதற்கு நேர்மாறாக, ஹைப்ரிட் அல்லது மலை பைக்குகளை உள்ளடக்கிய நிலையான பைக்குகள் பொதுவாக பல்துறை மற்றும் வசதிக்காக உருவாக்கப்படுகின்றன. பல்வேறு நிலப்பரப்புகளுக்கு ஏற்றவை ஆனால் அதிவேக பந்தயத்திற்கு உகந்ததாக இல்லை. பந்தயங்களில் சிறந்து விளங்க விரும்பும் போட்டியாளர்கள் சைக்கிள்களிடையேயான இந்த வேறுபாடுகளை கவனத்தில் கொள்ளல் மிக முக்கியமானது.

உலகளவில், சைக்கிள் ஓட்டுதல் உதைபந்தாட்டத்திற்கு அடுத்த பெருந்திரளான ரசிகர்களை கொண்ட ஒரு விளையாட்டாகவும் ஐரோப்பிய நாடுகளில் ஒரு வாழ்க்கை முறையாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதற்கு சான்றாக டூவர் டி பிரான்ஸ் மற்றும் ஒலிம்பிக் போன்ற முக்கிய நிகழ்வுகள் சைக்கிளிங் எனும் விளையாட்டின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்றன.

நெதர்லாந்து, டென்மார்க், ஜெர்மனி, பின்லாந்து, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகள் உட்கட்டமைப்பு மேம்பாடுகள் மற்றும் மிதிவண்டியின் நன்மைகள் குறித்த பொது விழிப்புணர்வு பிரசாரங்கள் மூலம் அரசாங்கங்கள் மிதிவண்டி பாவனையை ஆதரிக்கிறது.

உலகிலேயே அதிக மிதிவண்டி பயனர்களைக் கொண்ட நாடு நெதர்லாந்து ஆகும், இங்கு சுமார் 27% பயணங்கள் மிதிவண்டி மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த விரிவான மிதிவண்டி கலாசாரம், நன்கு நிறுவப்பட்ட மிதிவண்டி பாதைகளின் வலையமைப்பு, மிதிவண்டிக்கு ஏற்ற கொள்கைகள் மற்றும் இந்தப் போக்குவரத்து முறையை ஆதரிக்கும் ஒரு பொதுவான சமூக அணுகுமுறை ஆகியவற்றால் வலுவூட்டப்படுகிறது. டச்சு வாழ்க்கை முறை, பயணத்திற்காக மட்டுமல்லாமல், ஓய்வு மற்றும் விளையாட்டுக்காகவும் சைக்கிள் ஓட்டுவதை ஏற்றுக்கொள்கிறது, இது அவர்களின் அன்றாட வாழ்க்கையின் ஒருங்கிணைந்த பகுதியாக அமையப்பெறுகிறது.

சைக்கிள் ஓட்டுதல் உடல் ஆரோக்கியம், சமூக மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கு குறிப்பிடத்தக்க நன்மைகளைக் கொண்டுள்ளது. உள்ளூர் சைக்கிள் ஓட்டுதல் கலாசாரத்தை வளர்ப்பதில் ரைடர்ஸ் ஹப் போன்ற கழகங்களின் தாக்கம் விலைமதிப்பற்றது.

மேலும் சைக்கிள் ஓட்டுதலுக்கான வளர்ந்து வரும் உலகளாவிய உற்சாகம் நவீன சமூகத்தில் அதன் முக்கியத்துவத்தை பிரதிபலிக்கிறது. அதிகமான மக்கள் சைக்கிள் ஓட்டுதலை ஏற்றுக்கொள்வதால், ஒட்டுமொத்த நல்வாழ்வை மேம்படுத்துவதிலும் சுற்றுச்சூழல் சவால்களை நிவர்த்தி செய்வதிலும் அதன் பங்கு தொடர்ந்து விரிவடையும் அதற்கு ஒத்துழைக்கும் வகையில் அரசாங்கம் சைக்கிளுக்கான பிரத்தியேக பாதைகள் அமைத்துக்கொடுப்பதோடு அதற்கென பிரத்தியேக சட்டதிட்டங்களையும் செயற்படுத்துவதன் மூலம் எமது நாட்டையும் சுற்றுச்சூழலையும் பாதுகாப்பதோடு சைக்கிளிங்கை ஒரு தேசிய ரீதியான விளையாட்டாக மாற்ற முடியும்.

# தெளிவே என் சிந்தனையுள்... 18

தாகத்தில் தவித்த நாய் ஒன்று தண்ணீர் குடிக்க குளக்கரை ஒன்றிற்குச் சென்றது.

தெளிந்த நீரில் தன் விம்பத்தைக் கண்டு யாரோ நீருக்குள் இருக்கிறார்கள் என நினைத்து குரைக்கத் தொடங்கியது.

நீண்ட நேரமாக நாய் நீரில் உள்ள தனது விம்பத்தைப் பார்த்துக் குரைத்துக் களைத்துச் சோர்ந்து விட்டது.

ஒரு கட்டத்தில் தாகத்தை தாங்க இயலாமல் துணிந்து நீரைக் குடிக்கத் தொடங்கியது.

அதன் பின்னரே நாய்க்குப் புரிந்தது அது தனது விம்பம் என்று.

**அன்பானவர்களே!** எம்வாழ்வில் வரும் பிரச்சினைகளும் இவ்வாறானதே. அந்தப் பிரச்சினைகள் எம்முடைய கவனயீனத்தால் ஏற்படும் மிகச் சாதாரணமான பிரச்சினைகளாக இருக்கும்.


ஆயினும் அதற்கு அஞ்சி நாம் நம்மையே அழிக்கும் நிலைக்குச் சென்றுவிடுகிறோம்.

எம் பிரச்சினைகளை துணிந்து எதிர்கொண்டால் அவை பஞ்சாகப் பறந்து போய்விடும்.



குருஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலம் பல கண்ட யாழ். கோட்டை

63

செங்கை ஆழியான்

அரசடிவீதியில் நிகழ்ந்த றொக்கட் தாக்குதலில் பொன்னுத்துரை வத்சலா என்ற இளம் பெண்ணும், ஆறுமுகம் பரமேஸ்வரன் என்ற வங்கியாளரும் அவலமாகச் செத்தனர்.

நீராவியடியில் நிகழ்ந்த சகடைக்குண்டுவீச்சில் கோ. இராசப்பு என்ற தந்தையும் கனடாவிற்கு மறுநாள் மணமகளாகப் பயணப்படவிருந்த பெண் இ. சித்திராவும் அநியாயமாக இறந்தனர்.

விமானக்குண்டு வீச்சுக்களினால் கோட்டைச் சுற்றாடலில் மட்டுமன்றி வெளியிடங்களிலும் பல பாடசாலைக்கட்டடங்கள் அழிந்தன.

யாழ் மத்திய கல்லூரியின் பல கட்டடங்கள் சிதைந்து போயின. வேம்படி மகளிர் கல்லூரி, சென் பற்றிக்ஸ் கல்லூரி, சேன் ஜேன்ஸ் கல்லூரி என்பன பாதிப்புற்றன. யாழ் இந்து மகளிர் கல்லூரியில் சில பகுதிகள் தரை மட்டமாகின.

இந்துக்கல்லூரியின் ஒரு பகுதி சிதைந்துபோனது. யாழ்ப்பாண வைத்தியசாலையின் பல கட்டடங்கள் பாதிக்கப்பட்டன.

தேசிய சேமிப்பு வங்கியும் மக்கள் வங்கியின் பிரதான அலுவலகமும் தரைமட்டமாகின. யாழ்ப்பாண மாநகர சபைக் கட்டடங்கள் பல குண்டுவீச்சினால் தொடர்ந்து சிதைந்து போயின.

வெலிங்டன், வின்சர், லிடோ சாந்தி, ஹராண் ஆகிய தியேட்டர்கள் முற்றாக எரிந்து அழிந்தன. யாழ் ஆயர் இல்லம், ஆசனக்கோயில் என்பன குண்டு வீச்சினால் பலத்த சேதங்களுக்குள்ளாகின.

பிலிப் நேசிங் ஹோம் முற்றாகத் தகர்ந்தது. ஆயிரக்கணக்கான வீடுகள் தரைமட்டமாகின. தொடர்ந்து நிகழ்ந்த குண்டு வீச்சுக்களின் அதிர்வினால் வெடிப்படையாத வீடுகள் எதுவும் யாழ்ப்பாணத்தில் இன்றில்லை. தமிழ்ப்பகுதிகளில் யுத்தம் நிகழ்ந்து வரும் வேளையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்கா, "அரசின் கட்டுப்பாட்டில் விமானப்படைகள் இல்லை" என அறிவித்தார்.

மூர்க்கத்தனமான விமானக் குண்டுவீச்சினைக் கட்டுப்படுத்துமாறும் நிறுத்துமாறும் வெளிநாட்டுத் தாபனங்கள் கோரியபோது அவ்வாறான பதில் அவரால் அளிக்கப்பட்டது.

யுத்த நிறுத்தத்தை உடன் கைக்கொள்ளுமாறு கேட்டபோது பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன "கடைசிப் புலியைப்பிடிக்கும் வரை போர்நடக்கும் என்றார். இராணுவத் தீர்வை விடுத்துப் புலிகளுடன் பேச்சு வார்த்தைகளை ஆரம்பியுங்கள் என்றபோது ஆயுதங்களை கைவிட்டால் தான் புலிகளுடன் பேச்சு

(தொடரும்...)

# இனிப்பும் கசப்பும்




அவன் சிரிப்புக்குக் காரணம் தெரியாததால் பிரமிப்புடன் அவனைப் பார்த்த பலவர்மனை மீண்டும் நோக்கிச் சொன்னான் இளையபல்லவன். "பலவர்மரே! இந்தக் கோட்டை அத்தனை முக்கியமல்ல என்று நினைத்திருந்தால் நான் இங்கு வந்திருக்கவும் மாட்டேன். இத்தனை பெரிய இணையற்ற கப்பலை இந்த இடத்தில் நிர்மாணம் செய்திருக்கவும் மாட்டேன்." என்று.

பலவர்மன் எதிரேயிருந்த மரக்கலத்தின் மீது சில விநாடிகள் கண்களை ஓட்டினான். "மரக்கலம் மிகவும் அழகாயிருக்கிறது இளையபல்லவரே! ஆனால் இணையற்றது என்று சொல்லும்படி இதில் என்ன இருக்கிறது?" என்று வினவவும் செய்தான்.

இளையபல்லவன் கண்கள் பலவர்மன் முகத்தை விட்டு எதிரே நின்ற மரக்கலத்தின் மீது சஞ்சரித்தன. அதைப் பார்க்கப் பார்க்க அவன் கண்களில் பெருமை பெரிதாக விரிந்து அந்தப் பெருமையின் சாயை முகத்தையும் பூராவாக ஆக்ரமித்துக் கொண்டது. ஏதோ கனவில் பேசுவது போல் பேசினான் இளையபல்லவன். "பலவர்மரே! கப்பல்களைப் பற்றியோ கடற்போரைப் பற்றியோ நீண்ட நாள் வரை நான் ஏதும் அறியாதவன். சோழ நாட்டுத் தரைப் படைகளைப் பல சமயங்களில் நடத்தியிருக்கிறேன். பெரும் போர்களில் பங்கு கொண்டிருக்கிறேன்.

ஆனால் தென் கலிங்க மன்னன் பீமன் உதவியால் கடலோடும் வசதி பெற்றேன். அவன் தமிழர்களைத் துன்புறுத்தி, என்னையும் என் துணைவர்களையும் தெலைக்கத் திட்டமிட்டிருக்காவிட்டால் மரக்கலமேறும் பாக்கியமோ கடற் போர் பயிற்சி பெறும் வசதியோ எனக்குக் கிடைத்திருக்காது. கடலோடிய பின் அகூதாவிடமிருந்து பலவிதப் போர் முறைகளைக் கற்றேன். நான் இஷ்டப்பட்டால் இந்தத் துறைமுகத்தை ஒரே இரவில் அழித்துவிடும் வல்லமை எனக்குண்டு. நான் அதைச் செய்யாததற்குப் பலத்த காரணங்கள் உண்டு. இந்தத்துறைமுகம் எனக்குப் பெரிதும் பயன்பட்டிருக்கிறது. என் மரக்கலத்தைப் புதிதாக அமைக்க இடம் கொடுத்திருக்கிறது. அப்படி இடம் கொடுத்ததால் நான் பெரும் பலம் பெற்றிருக்கிறேன்." இந்த இடத்தில் பேச்சைச் சிறிது நிறுத்தினான் இளைய பல்லவன்.

பலவர்மன் ஏதும் விளங்காமல் இளையபல்லவனை நோக்கினான். பிறகு கேட்டான் "என்ன பெரும் பலம் அது?" என்று.

## கடற்புறா

இளையபல்லவன் முகத்தில் கனவும் பெருமையும் கலந்து தாண்டவமாடின. "இதோ காட்டுகிறேன் பாருங்கள் பலவர்மரே!"" என்று கனவில் பேசுபவன் போல் கூறிய இளையபல்லவன் பக்கத்திலிருந்த கண்டியத் தேவனை நோக்கி. "கோட்டைத் தலைவர் கேட்டது காதில் விழுந்ததா தேவரே?" என்று வினவினான்.

"விழுந்தது." சங்கடத்துடன் வெளிவந்தது கண்டியத் தேவன் பதில். "சரி. நமது பலத்தைப் புலப்படுத்துங்கள்." என்று உத்தரவிட்டான் இளையபல்லவன்.

அந்த உத்தரவை நிறைவேற்றத்தயங்கினான்" கண்டியத்தேவன் "இப்போது என்ன அவசரம் அதற்கு?" என்றும் வினவினான்.

"கோட்டைத் தலைவர் விரும்புகிறார்" என்று சுட்டிக்காட்டினான் இளையபல்லவன்.

"அவர் விரும்பினால்?" "அவர் கோட்டையின் உப தளபதி என்ற முறையில் அவர் விருப்பத்தை நிறைவேற்றுவது எனது கடமை அல்லவா?" "இருப்பினும் மரக்கலத்தின் சக்தி. அதன் மர்மம்."

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CINEMA சினிமா



டூரிஸ்ட் ஃபமிலியின் வெற்றியைத் தொடர்ந்து அதன் இயக்குநர் அபிஷன் ஜீவிந்த், மோஸ்ட் வான்டட் என்பது தெரிந்த கதையே. தற்போது, அவரிடம் நடிகர் தனுஷ் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறாராம். தன்னுடைய எதிர்பார்ப்பு, விருப்பம் எல்லாவற்றையும் அபிஷனிடம் சொல்லியிருக்கிறாராம் தனுஷ். பேச்சுவார்த்தைகள் சுமுகமாக போய்க்கொண்டிருக்கின்றன. விரைவிலேயே, இருவரும் இணைந்து மிரட்டும் அறிவிப்புகள் வரலாம் என்கிறார்கள்.



சுந்தர்.சியின் "கலகலப்பு" படத்தின் மூலம் திரைப்பயணத்தைத் தொடங்கியவர் காமெடி நடிகர் கருணாகரன். சினிமாவில் 14ஆவது ஆண்டைக் கொண்டாடும் கருணாகரன், இதுவரை 100 படங்களைத் தாண்டி விட்டதாகச் சொல்கிறார். ராதாமோகன் இயக்கிய "உப்புக்கருவாடு" படத்தில் கதாநாயகனாக நடித்தவர், அந்தப் படம் கைகொடுக்காமல் போனதால், காமெடியிலேயே கவனம் செலுத்தி வந்தார். தற்போது, மீண்டும் கதாநாயகன் ஆகவிருக்கிறாராம். அறிவிப்பு விரைவில்!



"கராத்தே பாபு" படத்தில் எம்.எல்.ஏ ஆகவும் தீவிரமான அரசியல் வாதியாகவும் நடிக்கும் ரவி மோகன் அதற்காக, ஒவ்வோர் அரசியல்வாதியும் பொதுமக்களைச் சந்திக்கும் போது கையாளும் பழக்க வழக்கங்களை உன்னிப்பாகக் கண்காணிக்கிறார். இதற்குக் காரணம் யாருடைய மேனரிசத்தையும் தன்னுடைய நடிப்பில் கொண்டுவந்துவிடாமல், முழுக்க முழுக்க புதுவிதமான அரசியல் வாதியாக இருக்க வேண்டும் என்கிற எண்ணம் தானாம்.

## முகம் 10;

## சிவகார்த்திகேயன்

**1.** சிவாவுக்கு அப்பா என்றால் உயிர். அவருடைய ஆதர்ஷ புருஷரும் அப்பாதான். அப்பாவைப் போல செய்யும் தொழிலை மதிக்கும் மனிதனாய் வாழ்ந்தாலே போதும், நிறைய சாதிக்கலாம்!' என்பார். இப்போது சிவா, அம்மா சொல் பேச்சு கேட்கும் செல்லப்பிள்ளை.

**2.** கிரிக்கெட்டில் எக்கச்சக்க ஆர்வம். அதன் சகல பரிமாணங்களையும் சேர்த்து அழகாக அவரால் பேச முடியும். ஷூட்டிங் இல்லையென்றால் சென்னை மேட்ச்களை தவறவிடவே மாட்டார்.

**3.** கடவுள் நம்பிக்கை உண்டு. முருகன் மீது பிரியம் அதிகம். சமீபத்தில் ஆறுபடை வீட்டுக்கும் போய் சிறப்பான தரிசனம் செய்துவிட்டு வந்திருக்கிறார். நெமிலி, நாகூர் தர்காக்கள் போகிற பழக்கமும் உண்டு. குழந்தைக்கு இரண்டாவது மொட்டைகூட நாகூரில்தான்.

**4.** எப்போதும் சிவாவிற்குப் பிடித்த கலர் நீலம். சில சென்டிமென்ட்களில் நம்பிக்கை உண்டு. அதையும் அவர் மனதிற்குள்ளாகவே வைத்திருப்பார்.

**5.** ஏ.ஆர் ரஹ்மான் இசை மிகவும் பிடிக்கும். கார், அலுவலகம் என இசைப்புயலின் இசையில் மனதை லயிக்க விடுவார் சிவா. அதிகம் பயன்படுத்துவது மினி கூப்பர் கார். அதிலும் காரை அவரே ஓட்டிச் செல்ல விரும்புவர்.

**6.** தான் நடித்ததிலேயே சிவாவுக்கு ரொம்பவும் பிடித்த படம் "வருத்தப்படாத வாலிபர் சங்கம்." ஆரம்பத்தில் தன்னை பெருங்கூட்டத்திற்குக் கைப்பிடித்து அழைத்துச் சென்றதன் காரணமே அது!



**7.** பாரம்பரிய நெல் ரகக் காப்பாளர் நெல் ஜெயராமன் மருத்துவமனையில் தன் கடைசி நிமிடங்களில் இருந்தபோது அவரைப் பார்க்க வந்தார் சிவகார்த்திகேயன். இன்று வரைக்கும் மறைந்த ஜெயராமனின் மகன் படிப்புச் செலவை ஏற்றுக் கொண்டிருக்கி றார்.


**8.** அப்பா மறைவதற்கு முன் புது வருடத்திற்காக கொடுத்த புத்தம் புதிய ஐந்து ரூபாய் நோட்டு எப்போதும் பர்சில் இருக்கும். பத்தாம் வகுப்பில் தமிழில் 98 மதிப்பெண் வாங்கியதால் அப்பா கொடுத்த அன்புப் பரிசு தங்கச் செயினும் ரொம்ப பேவரிட். எப்போதும் பாதுகாத்து வைத்திருக்கின்ற பொக்கிஷங்கள் ஐந்து ரூபாயும், தங்கச் செயினும்!

**9.** உணவில் அசைவம்தான் மிகவும் பிடிக்கும். சிக்கன், மீன் உணவை எடுத்துக்கொள்வது இஷ்டமானது. மிகவும் பிடித்தது அம்மாவின் கைப்பக்குவத்தில் செய்த பிரியாணி.

**10.** மிகவும் பிரியமாக இரண்டு லேப்ரடார் நாய்கள் வளர்க்கிறார். தீரா மற்றும் சிம்பா அவர்களின் பெயர். சிவாவின் சொல்பேச்சு கேட்டு நடக்கும் செல்லக்குட்டிகள்!



"டிராகன்" படத்தை அடுத்து பிரதீப் ரங்கநாதன், மமிதா பைஜூ நடிக்கும் **'DuDe'** படத்தின் ஷூட்டிங் ஹைதராபாத்திலும், சென்னையிலும் நடக்கிறது. அஜித் சேரின் "குட் பேட் அக்லி" யைத் தயாரித்த நிறுவனத்தின் படத்தில் நடிப்பது சந்தோஷமாக இருக்கிறது. பிரதீப் எனர்ஜியான நடிகர். எங்கள் காம்பினேஷன் பேசப்படும் என்கிறார் மமிதா.



ஹிந்தியில் வெளிவந்த "கில்" படம் ஆக்ஷனில் அதிகம் மக்களால் விரும்பிப் பார்க்கப்பட்டது. வசூலிலும் பெரிய அளவில் பேசப்பட்டது. அதைத் தமிழில் தயாரிக்கும் உரிமையை வாங்க பெரும் போட்டியே ஏற்பட்டது. தமிழ் ரீமேக்கில் துருவ் விக்ரமை நடிக்க வைக்க பேச்சு வார்த்தை நடக்கிறது. ஒப்பந்தம் ஆகிவிட்டால், ஆக்ஷன்களுக்காக துருவுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'
சுகமான விடியல்
453
வலம்புரியின் மருத்துவச்சுடர்

# மாரடைப்பு

(சென்றவாரத் தொடர்ச்சி...)

மாரடைப்பு ஏற்பட்டுள்ளதை வைத்தியர் எவ்வாறு இனங் காணுவார்?

நோயாளியின் அறிகுறிகள் பூரணநோய் வரலாற்றை அறிந்து கொள்வதன் மூலமும் நோயாளியைப் பரிசோதிப்பதன் மூலமும்.

ECG எனப்படும் இருதய வரைப் பட்டி:- இது மாரடைப்பின் தொடக்கத்தில் மாற்றங்கள் எதனையும் காட்டாது தொடர்ச்சியாக எடுக்கப்படும் போது மாறுதல் களைக் காட்டுவதாக இருக்கலாம். பொதுவாக மாரடைப்பு ஏற்படும் போது ECG இல் உள்ள மாற்றங்களைக் கொண்டே ஆரம்ப சிகிச்சை முறை தீர்மானிக்கப்படும்.

இரத்தப் பரிசோதனைகள் :- குறிப்பாக ரொபோனின் - (Troponin-I) இது மாரடைப்பு ஏற்பட்டு 4-6 மணித்தியாலங்களில் அதிகரிக்கும்.

எக்கோ (Echo) பரிசோதனை இதன்மூலம் மாரடைப்பின் போது இருதயத்தசைகள் பலவீனமடைந்துள்ளதா அல்லது இருதயத் தொழிற்பாடு குறைவடைந்துள்ளதா என அறிந்து கொள்ளலாம்.

ETT எனப்படும் (Treadmill test) இது மாரடைப்பின் பின்னரும் மாரடைப்பு ஏற்படும் முன்னரும் கூட நடக்கும் போது ECG இல் ஏற்படும் மாற்றங்களை வைத்து மேலதிக பரிசோதனையான அஞ்சியோகிராம் பரிசோதனையைத் (Coronary Angiogram) தீர்மானிப்பதற்கு உதவியாக இருக்கும்.

அஞ்சியோகிராம் (Coronary Angiogram) பரிசோதனை இருதயத்திற்கான இரத்தக்குழாய்களில் ஏற்படும் அடைப்பு வீதத்தையும் அடைப்பு காணப்படும் குருதிக் குழாய்களையும் இனங் கண்டு கொண்டு சிகிச்சை முறையை (Angioplasty/CABG) தீர்மானிப்பதற்கு உதவும்.


வைத்தியர் மாரடைப்பின் போது உங்களுக்கு வழங்கும் சிகிச்சைமுறைகள் எவை?

இரத்தம் உறைவதனை தவிர்க்கக் கூடியமருந்துகள் வழங்கல்.

உ-ம் - அஸ்பிரின் (ASprin), குளோபிடோகிறல் (Clopidogrel) நெஞ்சுவலியைக் குறைக்கும் மருந்துகள் வழங்கல்.

உ-ம் -– ISMN, GTN

இரத்த அழுத்தத்தை சீராக்கும் மருந்துகளும் இருதயத்துடிப்பைக் குறைத்து இருதயத்திற்கான இரத்த



வழங்கலை அதிகரிக்கும் மருந்துகளும் வழங்கல். உ-ம் - கப்ரோபிறில் (Capto pril), அடினலோல் (Atenolel) ஒட்சிசன் இருதயப் பலவீனம் ஏற்பட்டவர்களுக்கு பெரிதும் உதவும்.

இரத்தகுழாய்களில் உள்ள இரத்தக் கட்டிகளைக் கரைக்கும் (Thromolyis) மருந்துகளை வழங்கல் உ-ம் - ஸ்ரெப்ரோகைனேஸ் (Streptokainese), RTAஇதனால் இரத்தோட்டத்தை இயத்தசை மீளப்பெறும் வாய்ப்பு ஏற்படுகிறது. நோயாளி ஒருவர் நெஞ்சுவலி ஏற்பட்டு எவ்வளவு குறுகியநேர இடைவெளியில் சிகிச்சை பெற வருகின்றாரோ அவ்வளவு இம்மருந்துகள் பயன் படுத்தக் கூடியதாகவும் 12 மணித்தியாலங்களுக்குள் பலனைத் தருவதாகவும் இருக்கும்.

ஆரம்ப சிகிச்சையைத் தொடர்ந்து அன்சியோகிராம் பரிசோதனையின் பின்னர் அடைப்புகளுள்ள இரத்தக் குழாய்களை விரிவடையச் செய்யும் ஸ்ரெனட் (stent), இடப்படுதலோ (Angio plasty) இருதய சத்திரசிகிச்சை (ABG) செய்யப்படுவதாலோ மீள் குருதியோட்டம் பெறப்படும். இதனால் இருதயத் தசைகளுக்கு ஒட்சிசன் நிறைந்த குருதி வழங்கப்படும். இருதயத்தசை இறப்படைதல் தடுக்கப்படும். இதனால் மரணம் தவிர்க்கப்படும்.

மாரடைப்பின் பின்னர் எமது வாழ்க்கை முறையில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் என்ன?

உணவுப் பழக்கத்தில் ஏற்படும் மாற்றம் உணவில் கலோரிகுறைந்த உணவுகளான காய்கறிகள், விற்றமின்கள், கனியுப்புக்கள், நார்த்தன்மை நிறைந்த உணவுகள், பழங்கள் என்பவற்றை சேர்த்துக் கொள்ள வேண்டும். கொழுப்புச் சத்து குறைந்த தாவர எண்ணைய், சூரியகாந்தி எண்ணெய், நல்லெண்ணெய், ஆடை நீக்கிய பால் என்பவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம். மஞ்சட்கரு, ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, நண்டு, இறால் கணவாய், பெரிய மீன்கள் என்பவற்றைத் தவிர்க்க வேண்டும்.

மருந்துகளை சரியான அளவில் சரியான முறையில் பாவித்தலும் தவறாது கிளினிக் செல்வதன் மூலம் இரத்த அழுத்தம், இரத்தப் பரிசோதனைகளை கிரமமாகப் பார்த்துக் கொள்வதும் அத்தியாவசியம்.

மாரடைப்பினால் ஏற்படும் உடல், உளபாதிப்பை குடும்ப அங்கத்தவர்கள் பகிர்ந்துகொள்ள வேண்டும். சிலர் மீதமுள்ள ஆயுள் முழுவதும் பிறரில் தங்கி வாழும் நிலைமை ஏற்படும் போது ஏற்படும் மனச்சோர்வையும் மன அழுத்தத்தையும் நீக்க வைத்தியரின் உதவியையோ அல்லது உளவள ஆலோசகர்களின் ஆலோசனையையோ நாடலாம்.

உடற்பயிற்சி செய்வது மாரடைப்பினால் ஏற்படும் இருதயப் பலவீனத்தின் அளவைப் பொறுத்து தீர்மானிக்கப்படும். சாதாரணமாக நோயாளி தனக்கு களைப்பு ஏற்படாத வகையில் ஆரம்பித்து படிப்படியாக வேகத்தையும் நேரத்தையும் அதிகரித்து ஒரு நாளில் 20-30 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்வதை வழக்கத்தில் ஏற்படுத்த வேண்டும்.

இளவயதில் மாரடைப்பு ஏற்பட்டவர்கள் சிக்கல்கள் அற்ற மாரடைப்பாயின் 4 கிழமைகளின் பின்னர் உடலுறவை மேற்கொள்ளலாம். மது பாவனையையும் புகைப்பிடித்தலையும் நிறுத்திக் கொள்ள வேண்டும். உடற்பருமனை உயரத்திற்கு ஏற்ப குறைக்க வேண்டும்.

இருதய சத்திரசிகிச்சை அல்லது ஸ்ரெனட் (Stent) வைக் கத் தேவையானவர்கள் தமக்கு உரிய சிகிச்சை முறையை உடனடியாக தீர்மானிப்பதன் மூலம் மாரடைப்பின் பின்னரான மரணத்தை தவிர்த்துக் கொள்ளலாம். (முற்றும்)

P.லக்ஷ்மன்
வைத்திய கலாநிதி,
இருதய வைத்திய நிபுணர்.

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அரியாலை,வெட்டுக்குளம் புவனேசுவரி அம்பாள் ஆலய மகோற்சவகால கல்வி,கலைப்போட்டிகளுக்கான பரிசளிப்பு வைபவம் கடந்த ஞாயிறு தேர்த் திருவிழா நாளில் இடம் பெற்றது. அறநெறி பாடசாலை ஆசிரியர்கள், போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்கள், இந்திய தொலைக்காட்சி "சுப்பர் சிங்கர்" புகழ் செல்வி பிரியங்கா ஆகியோரை முதன்மை விருந்தினரான யாழ்ப்பாணப்பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன், கலாநிதி கௌரி சண்முகலிங்கன் ஆகியோர் கௌரவித்தமையை படத்தில் காணலாம்.

# தேசிய இனங்களின் உரிமைகளை வலியுறுத்தி வவுனியாவில் கையெழுத்துப் போராட்டம்!



(வவுனியா)

அனைத்து தேசிய இனங்களுக்கும் உரிமைகளை உறுதி செய்யுமாறு கோரி சமஉரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் கை எழுத்துப்போராட்டம் ஒன்று நேற்று இடம்பெற்றது.

வவுனியா இலுப்பையடி பகுதியில் நேற்று காலை குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கு, காணாமல் ஆக்கப்பட்ட அனைவருக்கும் நீதி வழங்கு, சம உரிமைகளை உறுதிசெய்யும் புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவோம் போன்ற கருத்துக்களை முன்வைத்திருந்தனர். குறித்த போராட்டத்தில் தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்கள் கலந்து கொண்டு தமது ஆதரவினை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-250)

லங்கா மஹால் (PVT) LTD
உள்நாட்டு, வெளிநாட்டு
விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே
வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(1309)
UK-1350, Australia-1950, Canada-2550, India-1490, Germany-1990, Italy-2250, Swiss-2490, France-2180
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
தொடர்புகளுக்கு
077 839 3974, 076 889 1308

கண்ணீர் அஞ்சலி
எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி. உஷாவன்னி சுரேந்திரன்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி.
நடராஜா
அன்னபூரணம்

தோற்றம் 20.08.1935
மறைவு 11.07.2025
அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
(சு-3397)
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்.


# நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள அரியாலைப் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குப்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு இலவசமாக விலங்கு விசர் நோய் தடுப்பூசி (ARV) கீழ்வரும் இடங்களில் வைத்து ஏற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுமாறும் ஓர் நாய்க்கான உரிமம் கட்டணமான 100 ரூபாய் அறவிடப்படும் எனவும் யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (நி)

| திகதி | நேரம் | தடுப்புமருந்து ஏற்றப்படும் நிலையத்தின் பெயர் |
|---|---|---|
| 14.07.2025 | 9.00- 11.00 | அரியாலை சனசமூக நிலையம் புங்கன் குளம் வீதி |
| | 11.00 - 1.00 | பென்ரிகோஸ் லேன் |
| | 2.30- 4 .00 | தியாகராசா படிப்பகம் கண்டி வீதி அரியாலை |
| 15.07.2025 | 9.00- 11.00 | சரஸ்வதி சனசமூக நிலையம் கண்டி வீதி அரியாலை |
| | 11.00 - 1 .00 | மிருக வைத்திய நிலையம் A.V. ROAD அரியாலை |
| | 2.30- 4 .00 | பிரப்பங்குளம் அம்மன் கோவிலடி இலந்தைக்குளம் வீதி |
| 16.07.2025 | 9.00- 11.00 | கலைமகள் சனசமூக நிலையம் அரியாலை |
| | 11.00 - 1.00 | காந்தி சனசமூக நிலையம் அரியாலை |
| | 2.30- 4 .00 | அருணோதயா சனசமூக நிலையம் அரியாலை |
| 17.07.2025 | 9.00- 11.00 | திருமகள் சனசமூக நிலையம் அரியாலை |
| | 11.00 - 1 .00 | மலர்மகள் சனசமூக நிலையம் அரியாலை |
| | 2.30- 4 .00 | பாரதி சனசமூக நிலையம் நாயான்மார்கட்டு செம்மன் வீதி |
| 18.07.2025 | 9.00- 11.00 | அம்பாள் சனசமூக நிலையம் பேச்சி அம்மன் கோவிலடி |
| | 11.00 - 1 .00 | மகேஸ்வரி பாடசாலை அருகில் நாயன்மார்கட்டு |
| | 2.30- 4 .00 | கலைவாணி சனசமூக நிலையம் பொன்னம்பலம் வீதி |
| 21.07.2025 | 9.00- 11.00 | முள்ளி வீதி அரியாலை |
| | 11.00 - 1 .00 | ஆள்காட்டி வீதி அருளம்பலம் வீதி சந்தி |
| | 2.30- 4 .00 | இராஜேஸ்வரி வீதி அரியாலை |
| 22.07.2025 | 9.00- 11.00 | கனகரட்னம் வீதி நாவலர் வீதீச்சந்தி அரியாலை |
| | 11.00 - 1 .00 | கனகரட்னம் மகா வித்தியாலயம் அருகில் நாவலர் வீதி |
| | 2.30- 4 .00 | பாரதி வீதி முதலியார் வீதிச்சந்தி அரியாலை |
| 23.07.2025 | 9.00- 11.00 | கச்சேரி நல்லூர் வீதி றக்கா வீதிச்சந்தி அரியாலை |
| | 11.00 - 1 .00 | பேரின்நாயகம் வீதி அரியாலை |
| | 2.30- 4 .00 | கச்சேரி நல்லூர் வீதி நாவலர் வீதிச் சந்தி |
| 24.07.2025 | 9.00- 11.00 | சாஸ்திரியார் வீதி அரியாலை |
| | 11.00 - 1 .00 | அருளம்பலம் வீதி (சந்தனமாதா ஒழுங்கை) |
| | 2.30- 4 .00 | கச்சேரி கிழக்கு புகையிரத பாதை ஒழுங்கை |

கண்ணீர் அஞ்சலி
ஆழ்ந்த அனுதாபங்கள்
காந்தன்
(புதிய உயர் கல்லூரி ஊழியர்)

பிரிவால் துயருறும்
(சி-3396)
YARL AID (கண்ணன் சேர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பாவில் தகிக்கும் வெப்பம் இதுவரை 23,000 பேர் உயிரிழப்பு



(பாரிஸ்)

ஐரோப்பா நாடுகளில் கடந்த மாதம் கோடைக் காலம் தொடங்கியது. அதில் இருந்து ஐரோப்பா நாடுகளில் கடுமையான வெப்பம் நிலவி வருகிறது. பிரான்ஸ், ஸ்பெயின், போர்த்துக்கல் தொடங்கி சுவிட்சர்லாந்து, பின்லாந்து, சுவீடன் உள்ளிட்ட நாடுகளிலும் இயல்பைக் காட்டிலும் கடுமையான வெப்ப அலை வீசுகிறது.

பிரான்ஸ் தலைநகர் பாரிசில் 105 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் வீசியது. ஸ்பெயினில் 106 டிகிரிவரை வெப்பம் வாட்டி வதைத்தது.

குறிப்பாக ஐரோப்பா நாடுகளில் இதுவரை இல்லாத அளவில் ஸ்பெயின் அருகே லிஸ்பனில் உள்ள மோரா நகரில் அதிகபட்சமாக 138 டிகிரிவரை வெப்பம் பதிவானது.

வெப்ப அலைவீச்சை சமாளிக்க இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட நாடுகளில் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டது. காலை 11 மணிமுதல் மாலை 6 மணிவரை பொதுமக்கள் வீட்டைவிட்டு வெளியேற தடை விதிக்கப்பட்டது. குறிப்பாக பிரான்சின் மெட்டியோ நகரம், ஜேர்மனியின் முனிச் ஆகிய நகரங்களில் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டு பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டன.

மேலும் அரசு அலுவலகங்கள், வங்கிகள், வணிக வளாகங்கள் ஆகியவை பகுதிநேரமாகவே செயற்பட்டு வருகின்றன. நகரில் உள்ள பூங்காக்கள், பொது மக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் தற்காலிக தண்ணீர் பம்புகள், செயற்கை நீரூற்றுகள் அமைக்கப்பட்டு பொது மக்கள் இளைப்பாற அனுமதிக்கப்பட்டனர்.

ஜேர்மனியில், வறட்சி மற்றும் வெப்பம் காட்டுத்தீ உருவாகி அதில் பல ஏக்கர் விளைநிலங்கள் தீயில் கருகி நாசமாகின. தொழில்துறைக்கு முந்தைய காலத்தை விட ஐரோப்பா ஏற்கனவே சுமார் 30 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் உயர்ந்துள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது.

புவி வெப்பமயமாதல், அதிகரித்து வருவதற்கு காரணம் தொழில் புரட்சி, புதைபடிவ எரிபொருட்கள் பயன்பாடு அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களால் வெப்ப அலைவீச்சு உயர்ந்து வருவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் கடந்த 10 நாட்களில் மட்டும் ஐரோப்பா நாடுகளில் 2,300 பேர் உயிரிழந்ததாக அங்குள்ள ஊடகங்களில் செய்திகள் வெளியாகி உள்ளன. (நி)

# பௌத்த மடாலயம் மீது மியான்மாரில் குண்டு வீச்சு

## 24 பேர் உயிரிழப்பு



(மியான்மார்)

மியான்மாரில் உள்ள பௌத்த மடாலயம் மீது மியான்மார் விமானப்படை மேற்கொண்ட வான்வழித் தாக்குதலில் சுமார் 23 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மியான்மாரின் சாகிங் பிராந்தியத்தின் சாகிங் டவுன்ஷிப்பில் உள்ள லிண்டலு கிராமத்தில் இடம்பெயர்ந்த பொதுமக்களுக்கு அடைக்கலம் கொடுத்த மடாலயத்தின் மீது மியான்மார் இராணுவ ஆட்சிக்குழு வான்வழியாக குண்டுகளை வீசியுள்ளது.

சகாயிங் மாகாணத்தில் உள்நாட்டு கிளர்ச்சிப்படைக்கும் மியான்மார் இராணுவத்துக்கும் இடையில் கடந்த சில வாரங்களாக மோதல்கள் அதிகரித்துள்ளன.

இருதரப்புக்கும் இடையில் நடைபெறும் மோதல்களிலிருந்து தப்பித்து மடத்தில் தஞ்சமடைந்திருந்த சுமார் 150 இற்கும் மேற்பட்டோர் இரவு உறங்கிக்கொண்டிருந்தபோது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கடந்த 2021 ஆம் ஆண்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆங்சான் சூகி தலைமையிலான அரசைக் கவிழ்த்து, இராணுவத்தின் ஆட்சி அமைக்கப்பட்டது முதல் மியான்மாரில் உள்நாட்டு மோதல்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# வடகொரியாவிற்கு பலத்தைக் காட்ட களத்தில் இறங்கிய நாடுகள்




(வோஷிங்டன்)

சர்வதேச கடற்பரப்பில் இந்தப் போர் பயிற்சி நடைபெற்ற நிலையில், பிராந்திய பாதுகாப்பை அச்சுறுத்தும் அனைத்து சட்டவிரோத நடவடிக்கைகளையும், வடகொரியா நிறுத்த வேண்டும் என மூன்று நாடுகளின் உயர் மட்ட இராணுவ அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். வடகொரியாவிற்கு தங்கள் ராணுவ பலத்தை வெளிக்காட்டும் விதமாக, அமெரிக்கா, தென் கொரியா, மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் இணைந்து, வான்வழிப் போர்ப்பயிற்சியை மேற்கொண்டுள்ளன.

அணுகுண்டுகளை வீசும் திறன் கொண்ட அமெரிக்காவின், பி-52எச் விமானமும் பயிற்சியில் பங்கேற்றது. சர்வதேச கடற்பரப்பில் இந்த போர்ப் பயிற்சி நடைபெற்ற நிலையில், பிராந்திய பாதுகாப்பை அச்சுறுத்தும் அனைத்து சட்டவிரோத நடவடிக்கைகளையும், வடகொரியா நிறுத்த வேண்டும் என மூன்று நாடுகளின் உயர் மட்ட இராணுவ அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

அதேபோல், இந்தோ-பசுபிக் பிராந்தியம் மற்றும் அதற்கு அப்பால் உள்ள பகுதிகளை நிலைகுலையச் செய்யும் நடவடிக்கைகளையும் நிறுத்திக்கொள்ள வேண்டுமெனவும் கூறியுள்ளனர்.

ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ், வடகொரிய பயணம் மேற்கொண்டுள்ளபோது, இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. உக்ரைனுடன் போரில் ஈடுபட்டுள்ள ரஷ்யாவிற்கு, வடகொரியா ராணுவ வீரர்களையும் வழங்கி உதவி செய்து வருவது குறிப்பிடத்தக்கது. (நி)

www.EQMarriageService.com
CALL 076 664 9401
ஒன்லைன் திருமணசேவை
Ensured Quality Lanka (Pvt) Ltd
Bambalapity, Colombo 04

| மணமகன் தேவை | மணமகள் தேவை |
|---|---|
| 1988, இந்து, பூரட்டாதி<br>பட்டதாரி<br>TEACHER<br>சொந்த இடம்: கொக்குவில்<br>மணமகள் பதிவு இல:11598 | 1993, இந்து, ஸ்வாதி<br>பட்டதாரி<br>TEACHER<br>சொந்த இடம்: சுதுமலை<br>மணமகன் பதிவு இல:11532 |
| 1974, இந்து, புனர்பூசம்<br>பட்டதாரி<br>TEACHER<br>சொந்த இடம்: யாழ்ப்பாணம்<br>மணமகள் பதிவு இல:11541 | 1988, இந்து, மிருகசீரிடம்<br>பட்டதாரி<br>TEACHER<br>சொந்த இடம்: வவுனியா<br>மணமகன் பதிவு இல:11378 |
| 1996, இந்து, பூராடம்<br>பட்டதாரி<br>TEACHER<br>சொந்த இடம்: உடுப்பிட்டி<br>மணமகள் பதிவு இல:11382 | 1991, இந்து, திருவோணம்<br>பட்டதாரி<br>TEACHER<br>சொந்த இடம்: புத்தூர்<br>மணமகன் பதிவு இல:10476 |
| 1990, இந்து, ரேவதி<br>பட்டதாரி<br>TEACHER<br>சொந்த இடம்: தெல்லிப்பழை<br>மணமகள் பதிவு இல:11329 | 1989, இந்து, சதயம்<br>பட்டதாரி<br>TEACHER<br>சொந்த இடம்: அளவெட்டி<br>மணமகன் பதிவு இல:11051 |
| 1996, இந்து, மிருகசீரிடம்<br>பட்டதாரி<br>TEACHER<br>சொந்த இடம்: வடமராட்சி<br>மணமகள் பதிவு இல:11210 | 1980, இந்து, பூராடம்<br>பட்டதாரி<br>TEACHER<br>சொந்த இடம்: யாழ்ப்பாணம்<br>மணமகன் பதிவு இல:10998 |

CALL 076 664 9401
(C-203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஷ்டத்தை அனுபவிக்காமல் எந்தவொரு மனிதரும் அவரது இலட்சியத்தை அடைய முடியாது –காமராசர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களை வழிப்படுத்துங்கள்

க.பொ.த (சா) தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

பரீட்சைப் பெறுபேறுகளின் பகுப்பாய்வுகளின் அடிப்படையில் வடக்கு மாகாணத்தின் நிலை ஆரோக்கியமானதாக இல்லை.

இதற்கான காரணங்கள் என்ன என்பது அனைவரும் அறிந்ததே.

எனினும் அதுபற்றிப் பேசுவதால் – எழுதுவதால் எதுவும் நடக்கப் போவதில்லை.

எங்களைக் கொண்டே எங்களை அழிக்கின்ற நுட்பத்தை இந்த நாட்டின் அதிகார வர்க்கம் தக்க முறையில் செய்து வருகிறது.

ஆகையால் அதைப் பற்றிக் கதைப்பது நேரத்தை வீணடிப்பதாக அமையுமேயன்றி, வேறு எந்தப் பிரயோசனமும் ஏற்படப் போவதில்லை.

இஃது ஒருபுறமிருக்க, க.பொ.த சாதாரண தரப் பரீட்சை என்பது மாணவர்களின் பாடசாலை வாழ்க்கையுடன் தொடர்புபட்டது.

அதாவது உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்தாலென்ன, சித்தியடையத் தவறினால் என்ன அந்த மாணவர்களின் பாடசாலை வாழ்க்கை உயர்தரப் பரீட்சையுடன் முடிவுக்கு வருகிறது.

ஆனால் சாதாரண தரப் பரீட்சை அவ்வாறானதன்று.

இங்கு சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்கள் பாடசாலை வாழ்க்கையை இழக்கின்றனர்.

ஆம், இலங்கையில் சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறு என்பது, பாடசாலையில் உயர் கல்வியைத் தொடர்வதைத் தீர்மானிக்கின்ற அதேநேரம் கணிசமான மாணவர்கள் பாடசாலைக் கல்வியை இழப்பதற்கு வழிவகுக்கின்றது.

அதிலும் முன்னைய பாடசாலைக் கட்டமைப்பில், சாதாரண தரப் பரீட்சையை மீளவும் எடுப்பதற்காக பாடசாலைக்குச் சென்று சாதாரண தரத்தில் கற்கக்கூடிய ஏற்பாடுகள் இருந்தன.

ஆனால் சமகாலத்தில் ஒருமுறையோடு, ஒன்றில் உயர்தரம் அல்லது பாடசாலையை விட்டு விலகல் என்ற நிலைமை ஏற்படுகிறது.

இங்குதான் சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் உயர்தரத்தில் கற்பதற்கு இடம்தாரத போது, அந்த மாணவர்களின் வாழ்க்கை எவ்வாறாகி விடும் என்பது பற்றி நாம் நீள நினைக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

ஆம், சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்கள் விரக்தியடையக் கூடிய சூழ்நிலைக்கு ஆளாகின்றனர். அதிலும் சம்பந்தப்பட்ட மாணவர்களை சரியான பாதையில் வழிப்படுத்தத் தவறுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களும் அந்த மாணவர்களை பிறழ்வான பாதைக்கு அழைத்துச் செல்லக்கூடிய சமூகச் சூழ்நிலை நம் மத்தியில் பெருகிக் கிடப்பதையும் நாம் அறிந்தாக வேண்டும்.

ஆகையால், சித்தியடையாத மாணவர்களை ஏதோவொரு வகையில் அதாவது மீளவும் சாதாரண தரத்தில் கற்பதற்கு அல்லது உயர்தரத்தில் படிப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். அதுவும் சாத்தியமாகாதபோது தொழில்நுட்பக் கல்லூரி போன்ற இடங்களில் அந்த மாணவர்கள் இணைந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் விசாரணை உண்மைகளை மறைக்க மாட்டோம்

## பிரதமர் ஹரிணி உறுதிபடத் தெரிவிப்பு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளில் வெளிவரும் புதிய விடயங்களை தேவையான நேரத்தில் மக்களுக்கு அறிவிப்போம். இதில் மறைப்பதற்கு தேசிய மக்கள் சக்தி அரசுக்கு எதுவும் இல்லையென பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

கடந்த அரசாங்கத்தால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் புலனாய்வு செய்து விசாரணை மேற்கொள்ள ஒரு ஆணைக் குழுவே அமைக்கப்பட்டிருந்தது.

அந்த ஆணைக்குழுவில் உயர் நீதிமன்ற நீதியரசர் ஜனப்தசில்வா, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி நிஸ்சங்க பந்துல கருணாரத்ன, மேன்முறையீட்டு நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி நிஹால் சுனில் ராஜபக்ஷ், மேல் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி அத்தபத்து லியனகே, ஓய்வு பெற்ற அமைச்சு செயலாளர் டபிள்யூ.என்.எம். ஆர். அதிகாரி ஆகியோர் அடங்குகின்றனர்.

அந்த ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை 2021.02.25 ஆம் திகதி பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

மேலும் விசாணை ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டு அது தொடர்பில் ஆராயப்பட்டு வருகிறது.

அதன் பிரகாரம் சட்டமா அதிபரால் பரிந்துரைக்கப்படும் இறுதிப் பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டு எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எமது அரசாங்கம் பின்வாங்காமல் முன்னெடுக்கும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் இதுவரை நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழு, ஜனாதிபதி விசாரணை குழுவினால் வழங்கப்பட்டிருக்கும் பரிந்துரைகளை சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் முறையாக செயற்படுத்த எமது அரசாங்கம் தயாராகவுள்ளது.

அதைப் போன்று தே.ம.சக்தி அரசாங்கம் விசாரணை மேற்கொண்டதன் மூலம் பல புதிய விடயங்கள் வெளிவந்துள்ளன. அந்த விடயங்களை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்திருக்கிறோம்.

தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கையில் மறைப்பதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு எதுவும் இல்லை.

நாங்கள் இந்த விசாரணைகளை சரியான முறையில் மேற்கொண்டு விசாரணைகளிலிருந்து வெளிவரும் விடயங்களைத் தேவையான நேரத்தில் மக்களுக்கு அறிவிப்போம் என்றார். (ம-7)

## பறவைகள் பூங்காவிலிருந்து வெளிநாட்டு உந்துருளிகள் கஞ்சாச் செடிகள் மீட்பு

ஹம்பாந்தோட்டை பறவை பூங்காவிலுள்ள களஞ்சியசாலை ஒன்றில் சட்டவிரோதமாக நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட 21 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 4 கஞ்சா செடிகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வலானமத்திய ஊழல் தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் நடத்தப்பட்ட சோதனையின்போதே குறித்த மோட்டார் சைக்கிள்கள் மற்றும் கஞ்சா செடிகள் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)

## கன்னிமார் கௌரி அம்பாளிற்கு இன்று மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

குப்பிழான் வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகமானது இன்று ஞாயிற்றுக் கிழமை காலை சிறப்புற நடைபெறவுள்ளது.

கிரியாக் ரமஜோதி சிவஸ்ரீ கிருஷ்ண பிரணவக் குருக்கள் தலைமையில் யாகசாலையில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று மஹா பூர்ணாகுதி சமர்ப்பணம் ஸ்தூல லிங்க கும்பாபிஷேகம் என்பனவற்றை தொடர்ந்து அம்பாளுக்கும் விநாயகர் முதல் சண்டேஸ்வரி வரையான பரிவார மூர்த்திகளுக்கும் திருவோண நட்சத்திரமும் அமிர்த சித்த யோகமும் திருதியை திதியும் கூடிய சுபதினத்தில் காலை 7.00 மணி முதல் 8.10 மணிவரையுள்ள கடக லக்கினத்தில் சுபமூர்த்தத்தில் மகாகும்பாபிஷேகம் பக்தி பூர்வமாக இடம்பெறவுள்ளது. (ம-7)

## வவுனியா நகர்ப்பகுதிக்குள் திடீரென நுழைந்த யானை

(வவுனியா)

வவுனியா நகர்ப்பகுதிக்குள் நேற்று யானை ஒன்று நுழைந்தமையால் பொதுமக்களிடையே பெரும் அச்சம் ஏற்பட்டது.

சன நெரிசல் மிகுந்த பகுதிக்குள் திடீரென புகுந்த யானை தோணிக்கல் பகுதியில் வீடொன்றைச் சேதப்படுத்தியதுடன் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும் துவம்சம் செய்துள்ளது.

பின்னர் தோணிக்கல் வீதியூடாக நகரத்தை அடைந்த யானை தினச்சந்தைக்கு பின்புறமாக அமைந்த வவுனியா குளத்தில் இறங்கியுள்ளது.

இதன்போது அருகிலிருந்த சில கட்டடங்களின் சுவர்களையும் சேதப்படுத்தியுள்ளது.

சம்பவம் குறித்து வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டு, சம்பவ இடத்திற்கு வந்த அதிகாரிகள் யானையைப் பாதுகாப்பாக அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (ம-7)

## வாகன விபத்தில் இருவர் உயிரிழப்பு

கண்டி ஹசலக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹசலக்க - ஹெட்டிப்பொல வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.


உடவலவில் இருந்து ஹெட்டிப்பொல நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று முன்னால் பயணித்த சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது மோட்டார் சைக்கிளின் செலுத்துனரான பரவதர்னப் பகுதியை சேர்ந்த 28 வயதுடைய இளைஞனும் சைக்கிளில் பயணித்த ஹசலக்க பிரதேசத்தைச் சேர்ந்த 73 வயதுடைய வயோதிபருமே படுகாயமடைந்த நிலையில் மஹியங்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக ஹசலக்க பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 20 - 10 - 1944



மறைவு 12 - 07 - 2025

## ஐயாத்தம்பி சிவப்பிரகாசம்

வாத்தியார் கோவிலடி (நாகேஸ்வரம்) அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் ஞானலிங்கேஸ்வரர் கோவிலடி, இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்தம்பி சிவப்பிரகாசம் அவர்கள் நேற்று (12.07.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
077 869 8628, 076 458 1725

(C-3404)

# மரண அறிவித்தல்

தோற்றம் 07 - 07 - 1933



மறைவு 12 - 07 - 2025

## தனுக்கோடி பொன்னம்மா

நெடுந்தீவு மேற்கு 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இலக்கம் 419 அக்கராயனை வசிப்பிடமாகவும் கொண்ட தனுக்கோடி பொன்னம்மா அவர்கள் நேற்று (12.07.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் அமரர் தனுக்கோடியின் அன்பு மனைவியும் அமரர் வைத்திலிங்கத்தின் அன்புச் சகோதரியும் அமரர் லோகநாதன், அமரர் சந்திராதேவி, புனிதாதேவி, வரதராசா, சாந்தலிங்கம், கமலாதேவி, ஜெயக்குமார், பாரதி, தேவராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெகதீஸ்வரி, சுந்தரலிங்ம், மங்கையற்கரசி, பாமினி, ஜெயக்குமார் (அமரர்), தயாபரன்,மேகலா, யோகலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் டிரோசா, கோகிலா, புவிசன், குறிஞ்சி, கயூரன், நிறைஞ்சனா, இந்துஷா காண்டீபன், சஞ்ஜித், சோபிகா, லஜீபன், கலையின்பன், மதுஜன், அவனிகா, சிவாகர், அக்ஷயா, கிஷோத், கவிவாணன், அபிநயன், போதினி,லெவிந், ஓவிகா ஆகியோரின் பேர்த்தியும் யவீன், கவிஷ்னா கர்விகன், பிரவீன், ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2025) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 02.00 மணியளவில் ஸ்கந்தபுரம் இந்து பொதுமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(1325)

# உலக கிண்ண கிரிக்கெட் தொடர்களில் பங்கேற்க தகுதி பெற்ற இத்தாலி

(கொழும்பு)

இந்தியா மற்றும் இலங்கை இணைந்து நடத்தும் 2026 ஆம் ஆண்டு இருபதுக்கு 20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கு இத்தாலி அணி தகுதி பெற்றுள்ளது.

சர்வதேச தொடர் ஒன்றுக்காக இத்தாலி கிரிக்கெட் அணி தகுதி பெறும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

நெதர்லாந்தின், ஹேக்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற தகுதி காண் போட்டியில் நெதர்லாந்திடம் இத் தாலி அணி 9 விக்கெட்டுகள் வித்தி யாசத்தில் தோல்வியடைந்தது.

எனினும், முதல் இரண்டு இடங்களைப் பிடித்திருந்தமையினால் இத்தாலி அணி தகுதி பெற்றது.

அதேநேரம், போட்டியில் வெற்றி பெற்ற நெதர்லாந்து அணியும் அடுத்த ஆண்டு போட்டிக்காகத் தகுதி பெற்றுள்ளது. (3)

## எலும்புக் ...

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் ஊடகங்களிடம் நேற்று மீண்டுமொருமுறை கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழியில் எலும்புக் கூடுகளை அகழ்ந்து எடுப்பதால் என்ன பயன் கிடைக்கும் என்று தமிழர்கள் எண்ணுகின்றார்கள்? அதனால் எந்தப் பயனும் கிடைக்காது.

முதலில் அந்த மனித எலும்புக் கூடுகள் தமிழர்கள்தான் என்பதற்கு என்ன உத்தரவாதம்? இன்னமும் பரிசோதனை நடத்தாமல் அந்த மனித எலும்புக்கூடுகளை வைத்துத் தமிழ்த் தரப்பினர் அரசியல் இலாபம் தேட முற்படுகின்றனர்.

நான் ஏற்கனவே தெரிவித்தது போல் போர் நடந்த மண்ணில் மனித எலும்புக்கூடுகள் வெளிக்கிளம்பும் என்பது உண்மை. அதேவேளை, போர் நடந்த வடக்கு மண்ணில் தமிழர்கள் மாத்திரம் உயிரிழக்கவில்லை.

அங்கு இராணுவத்தினரும் இறந்தார்கள், சிங்கள, முஸ்லிம் மக்களும் இறந்தார்கள். போரில் இறந்த தமது உறவுகளின் எலும்புக்கூடுகளை வைத்து அரசியல் நடத்தும் தேவை சிங்கள - பௌத்தர்களுக்குக் கிடையாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், யார் என்றே உறுதிப் படுத்தாத எலும்புக்கூடுகளை வைத்துத் தமிழர்கள் கேவலமான முறையில் அரசியல் நடத்துகின்றார்கள். இந்த நாட்டில் மீண்டும் இரத்தக்களரியை ஏற்படுத்த தமிழர்கள் விரும்புகின்றார்களா? என்று அவர் மேலும் கேள்வி எழுப்பினார். (ம-7)


## வேலையாள் தேவை

திருமுறிகண்டியில் இயங்கும் சைவ உணவகத்திற்கு தங்கி நின்று வேலைசெய்ய சமையல் உதவியாளர் தேவை.

தொடர்புகளுக்கு :
077 993 0280

(1326)

## வெல்டிங் வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வெல்டிங் கடை ஒன்றிற்கு அனுபவம் வாய்ந்த வேலையாள் தேவை.

- மதிய உணவு வழங்கப்படும்.
- சம்பளம் :- நாள் ஒன்றிற்கு 5,000/=
- மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்.

தொடர்புகளுக்கு :
077 937 0000, 075 988 1000

(1323)


# மரண அறிவித்தல்

தோற்றம் 1985 - 07 - 02



மறைவு 2025 - 07 - 11

## இராமச்சந்திரன் ஜெயகாந்தன்

(புதிய உயர்கல்லூரி பணிநிலை உத்தியோகத்தர் – ஆரியகுளம், யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமச்சந்திரன் ஜெயகாந்தன் அவர்கள் கடந்த (11.07.2025) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் இராமச்சந்திரன் - காலஞ்சென்ற நவமணி தம்பதியரின் அன்பு மகனும் தவசீலன் (மாவட்ட செயலக சாரதி), தவறஞ்சன் (உரிமையாளர் - SS Tourist Inn ஆரியகுளம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகோதரனும் துஷாந்தினி அவர்களின் மைத்துனரும் தர்மியா, றேமிகா ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைக-ள் இன்று (13.07.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பத்தகலட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மடத்தடி வீதி,
சிறுப்பிட்டி.

தகவல் : குடும்பத்தினர்
077 984 6700

(C-3402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரயில் மோதியதில்...

இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேபகுதியைச் சேர்ந்த கறுப்பையா ஐங்கரன் (வயது-40) என்பவரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,316)

## அழைத்துச்...

நிலையில் படகில் இருந்த 14 பேர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர்.

நெடுந்தீவைச் சேர்ந்த தனியார் ஒருவருக்குச் சொந்தமான சிறிய படகில், நெடுந்தீவில் இருந்து 12 சுற்றுலாப் பயணிகளும், படகின் பணியாளர்கள் இருவருமாக 14 பேர் குறிகாட்டுவான் நோக்கி தமது பயணத்தினை நேற்று சனிக்கிழமை மாலை ஆரம்பித்துள்ளனர்.

நெடுந்தீவுக்கும், குறிகாட்டுவானுக்கும் இடையில் கடலில் படகு திடீரென பழுதடைந்துள்ளது. அத்துடன் படகினுள் கடல் நீரும் உட்புகத் தொடங்கியுள்ளது.

அந்நிலையில் படகில் இருந்த பணியாளர்கள், இருவரும் படகில் இருந்து வெள்ளைக்கொடியை அசைத்துக் காட்டியுள்ளனர். அதனைப் பிறிதொரு படகில் சென்றவர்கள் அவதானித்து, குறித்த படகினை நோக்கி விரைந்துள்ளனர்.

படகு நீரில் மூழ்கிய வண்ணம் காணப்பட்டதனை அடுத்து, படகில் இருந்தவர்கள் தமது படகுக்கு ஏற்றியுள்ளனர். அவ்வாறு ஏற்றிய போதிலும், 12 பேர் படகில் ஏறிய நிலையில், இருவர் படகில் ஏற முதல் பழுதடைந்த படகு கடலில் மூழ்கியுள்ளது. அந்நிலையில் இருவரும் கடலில் நீந்திப் பாதுகாக்க வந்த படகில் ஏறியுள்ளனர்.

அதேவேளை சம்பவம் தொடர்பில் அறிந்த கடற்படையினர் சம்பவ இடத்திற்கு தமது படகில் விரைந்து, மூழ்கிய படகில் இருந்து காப்பாற்றப்பட்டவர்களை தமது படகில் ஏற்றி குறிகாட்டுவான் கரைக்குக் கொண்டு வந்தனர். (ம-7)

## புதிய அமெரிக்க...

ரிக்கத் தூதுவராக அமெரிக்க இராஜதந்திரி எரிக் மேயரை நியமிக்க வெள்ளை மாளிகை பரிந்துரைத்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், எரிக் மேயரின் பெயரை அமெரிக்க செனட்டில் உறுதிப்படுத்துவதற்காகப் பரிந்துரைத்துள்ளார்.

எரிக் மேயர் தென் மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான சிரேஷ்ட அதிகாரியாக இந்தியா, ஆப்கானிஸ்தான், இலங்கை, மாலைதீவுகள் உள்ளிட்ட 13 நாடுகளில் நிர்வாகத்தின் கொள்கை முன்னுரிமைகளை ஒருங்கிணைப்பதற்கும் பணியகங்களை மேற்பார்வையிடுவதற்கும் பொறுப்பாளராகச் செயற்படுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ஹயஸ் மோதி...

பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

திருநெல்வேலி பலாலி வீதியில் அமைந்துள்ள அம்மாச்சி உணவகத்துக்கு முன்பாக நேற்று மதியம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் இலங்கை போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலை நடத்துநராக கடமையாற்றும் நயினாதீவு 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கிரிஸ்தோத்திரம் பாலேஸ்வரன் (வயது-44) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்த குறித்த நபர் திருநெல்வேலி, பலாலி வீதியில் அமைந்துள்ள அம்மாச்சி உணவகத்தில் உணவருந்திய பின்னர் பிள்ளைகளுக்கும் உணவு வாங்கிக்கொண்டு பலாலி வீதியில் துவிச்சக்கரவண்டியில் ஏற முற்பட்டவேளை, வீதியில் மிக வேகமாக வந்த ஹயஸ் ரக வாகனம் மோதியுள்ளது. அதில் படுகாயமடைந்தவரை அங்கிருந்தவர்கள் மீட்டு, யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்துத் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை இவரது இரு பிள்ளைகள் பேராதனை மற்றும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுவரும் நிலையில், இளைய மகள் அண்மையில் வெளியான க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 9ஏ பெறுபேறுகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-7,33,60,104)

## அரசியல் கைதி...

வேலியில் குரலற்றவர்களின் குரல் அமைப்பினரால் இந்தப் போராட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

தமிழ் அரசியல் கைதியான விக்னேஸ்வரநாதன் பார்த்தீபன், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில், தமிழ் அரசியல் கைதிகள் உயிர்ப்புடன் விடுதலை பெற்று அவர்கள் தங்களது குடும்பங்களுடன் இணைய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இந்த நூதன போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## வவுனி...

மேலும் பொலிஸாரின் மூன்று வாகனங்களும் சேதமடைந்தன.

இதில் இராமசாமி அந்தோனிப்பிள்ளை (வயது-58) என்பவரே உயிரிழந்தவராவார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த மேற்படி நபரை துரத்திச் சென்ற பொலிஸார் மோட்டார் சைக்கிளின் சில்லுக்குள் தடியொன்றை வீசி தடையை ஏற்படுத்தியதால் நிலைதடுமாறி விழுந்ததனால் மேற்படி நபர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார் என்று பிரதேச மக்கள் குற்றம் சுமத்தினர்.

வவுனியா கூமாங்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் ஒருவர் விழுந்து கிடப்பதாக நேற்றுமுன்தினம் இரவு போக்குவரத்து பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகள் நால்வருக்கு நபரொருவர் தகவல் வழங்கியுள்ளார். அதனடிப்படை நான்கு பொலிஸ் அதிகாரிகளும் சம்பவ இடத்திற்குச் சென்றபோது, அருகில் இருந்த ஒரு குழு அவர்களைத் தாக்கியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், குறித்த நபர் ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிளின் சக்கரத்தில் பொலிஸார் ஒரு கட்டையை வீசியதன் காரணமாக, அவர் விழுந்து இறந்ததாகவும் கிராம மக்கள் கூறியுள்ளனர்.

இருப்பினும், அவ்வாறு நடந்திருந்தால், சக்கரம் சேதமடைந்திருக்கும். மேலும் விபத்துடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிளின் சக்கரத்திற்கு எந்தச் சேதமும் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் நிலைமையைக் கட்டுப்படுத்த வானத்தை நோக்கிப் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதோடு பொலிஸ் கலகத் தடுப்புப் பிரிவும் பொலிஸ் விசேட அதிரடிப் படையும் வரவழைக்கப்பட்டன. (ம-7,250)

மஹஜன சம்பத
திகதி 2025.07.12
சீட்டிழுப்பு இலக்கம் 5888
N 3 5 1 9 7 9
அத சம்பத
N 1 9 7 9
சீட்டிழுப்பு இலக்கம் 0463

சுப தவசக்
திகதி 2025.07.12
சீட்டிழுப்பு இலக்கம் 904
கன்னி 11 19 40 47

தன நிதானய
திகதி - 2025.07.12
சீட்டிழுப்பு இலக்கம் - 1918
Z 12 13 50 67 Z
18503

மெகா பவர்
திகதி 12/07/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2236
S 07 03 28 30 48

ஜய
திகதி 2025.07.12
சீட்டிழுப்பு இலக்கம் 0156
A 4 6 4 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4130
சீட்டிழுப்பு திகதி 12.07.2025
W 05 32 37 63
W

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.07.12
சீட்டிழுப்பு இலக்கம் 1197
ரிஷபம் 25 48 58 61 ரிஷபம்
87085 38

உத்தியோகபூர்வ முடிவுகள்
12.07.2025 வெற்றி வாரம் 0596
L 4 9 2 7 3 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20.258.015.20

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2862
சீட்டிழுப்பு திகதி 2025.07.12 தினம் சனிக்கிழமை
20 60 77 78 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 74,727,996.80

சனிதா
திகதி 12.07.2025 வெற்றி வாரம் 5023
27 33 49 50 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,135,976.00

சசிரி
வெற்றி வாரம் 724
சீட்டிழுப்பு திகதி 12.07.2025
சனிக்கிழமை
01 05 23
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4574
சீட்டிழுப்பு திகதி 12.07.2025 தினம் சனிக்கிழமை
மிதுனம்
09 33 42 44
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,342,369.20

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
C 20 10 16 18 75
2038
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.582,110,631.00
12.07.2025 சனிக்கிழமை

அத கோட்டிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2688
சீட்டிழுப்பு திகதி : 2025.07.12
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.71,320,272.00
08 12 58 64 M

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடி வேலை வாய்ப்பு
### நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- திருகோணமலை
- கோப்பாய்
- பண்டத்தரிப்பு
- கொழும்பு
- சுன்னாகம்
- மானிப்பாய்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- புத்தூர்
- சங்கானை

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் 30'000/
பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777
v2vacancies@gmail.com
(C-3403)



## கனடா - வரி இல்லாமல்
### விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3950/- |
| 11-16 Kg | 2690/- |
| 21-27 Kg | 2490/- |

- குறைந்த விலை - நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

| | | |
|---|---|---|
| UK 11Kg 1400 | France 11Kg 2200 | Germany 11Kg 2000 |
| Swiss 11Kg 2470 | Australia 11Kg 2130 | Italy 11Kg 2250 |

எமது தொடர் கிளைகள்
- கொழும்பு
- மட்டக்களப்பு
- திருகோணமலை
- கிளிநொச்சி
- புதுக்குடியிருப்பு
- கொடிகாமம்
- புத்தூர்
- சாவகச்சேரி
- கோப்பாய்
- சுன்னாகம்
- யாழ்ப்பாணம்
- சங்கானை
- பண்டத்தரிப்பு
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241 / 076 822 6237



## வேலையாட்கள் தேவை

**Event planner**
**Decoration Helper(boy)**
**Salary - 45000/=**

Call
**077 775 0318**
(4788)



## புதிய பிரிவுகள் ஆரம்பம் 19.07.2025

தொழிற்துறைக்கணக்காளர் ஆவதற்கு
**aat (SriLanka)**
**(AA1, AA2, AA3)**
Qualification:- G.C.E O/L 6 Passes
(Medium - Tamil & English)

✧ A/L மாணவர்களின் நலன் கருதி வார நாட்களில் aat வகுப்புக்கள் நடாத்த தீர்மானித்துள்ளோம்.

கணக்காளர் கற்கை நெறிகள்
**Chartered Accounting Courses**
Business Level I,II
Qualification:- G.C.E A/L 3 Passes(Medium - Tamil & English)

Further Details:- Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
0212223382
0774405917
(C-3380)



## AL PHYSICS CLASS

27, 26 Batch இற்கான தனிப்பட்ட, குழு வகுப்புகளுக்கு மேலதிக பிரதம பரீட்சகராக புள்ளித்திட்டமிடலில் பங்கேற்ற விஞ்ஞான பட்டதாரி ஆசிரியரிடம் கல்வி கற்று A சித்தியைப்பெற

**077 600 4896**
ஐ தொடர்புகொள்ளவும்.
(4770)



## காணி, வீடு விற்பனைக்கு

01. நல்லூரில் கோயில் வீதியோரமாக 2 பரப்புக் காணி
02. திருநெல்வேலி சந்தை, பிரதேச சபைக்கு அண்மையாக 2 ½ பரப்பு காணி ஆடியபாதம் வீதியோரமாக
03. நாவலர் வீதியில் 2 ½ பரப்பு காணியில் 2 வீடுகள்
04. மயிலிட்டி வீதியோரமாக பலாலி விமான நிலையத்திற்கு அண்மையாக 75 பரப்பு காணி
05. அச்செழுவில் வீதியோரமாக 2 ¾ பரப்பு காணி
06. அராலியில் முருகமூர்த்தி பாடசாலைக்கு அண்மையாக 3 பரப்பு காணியில் வீடு

தொடர்புகளுக்கு :
**077 221 6683**
(4745)



## விற்பனையாளர் தேவை

நெல்லியடியில் அமைந்துள்ள பிரபலமான புடைவையகத்திற்கு வேலை தெரிந்த/ பழக விரும்பும் ஆண்/பெண் விற்பனையாளர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு :
**077 848 9459**
(C-3400)



## காணி, வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் குப்பிளானில் பலாலி வீதியிலிருந்து 1 Km தூரத்திலும் kks வீதியிலிருந்து 2.5Km தூரத்திலுள்ள வீடு மற்றும் 4 ½ பரப்பு காணி (கற்கரை பிள்ளையார் கோவிலின் அருகாமையில் உள்ளது.) நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், செம்மண் காணி

**071 366 3327**
(4752)



## சதாபொன்ஸ் கல்வி நிலையம்
### மாலி சந்தி, அல்வாய்

**O/L மீட்டல் வகுப்புக்கள்**

ஆரம்பம் நாள் : 14.07.2025 திங்கள்
நேரம் : காலை 7.15

அனுமதி இன்று முதல்

**077 3095 176, 021 226 3206, 076 126 0105**
(C-3401)



## வேலையாட்கள் தேவை

**Sale Rep.**
**Salary - 75000/=**

Call
**077 775 0318**
(4789)



## We are Hiring
## OPERATIONS COORDINATOR

Sumi Foundation (www.sumi.ngo) is providing free early childhood education to underprivileged children in Sri Lanka.

**Responsibilities**
- Develop and implement strategies aligned with the Sumi Foundation's vision
- Oversee daily operations and ensure curriculum adherence by teachers
- Oversee budget, expenses, and report to external auditors
- Maintain communication with internal and Canadian teams
- Address inquiries from government officials, teachers and parents
- Other duties as required

**Qualifications**
- 4+ years of experience in a similar role in a structured organization
- Proficiency in Microsoft Office (Outlook, Word, Excel) is required
- Accounting experience is an asset
- Fluency in English and Tamil (written and verbal) is required
- Strong attention to detail, time management, and organizational skills are required

**Location** : Jaffna Office (Beside Vembadi School)

**Monthly Salary** : Rs 80K+ (negotiable)



Sumi® FOUNDATION
Established in 2010
www.Sumi.ngo

Send your PDF Resume (file name as your full name)
Email: hr@sumi.ngo
Subject Line: "Operations Coordinator"
(1310)



## WE ARE HIRING
### Business Development Executive

NEXA ERP (www.nexa.lk) is a leading ERP solution provider in Sri Lanka, helping businesses streamline operations and drive growth.

**Requirements:**
- Schedule demo meetings and ensure timely client delivery
- Achieve monthly **targets & close sales** deals
- Proficiency in ERP Software and CRM software is a plus

**Qualifications:**
- 1-2 years experience in a relevant field.
- HND/BSc in Business Management, IT or related field
- Excellent communication skills in Tamil & English

**Location:** Amman Road, Nallur, Jaffna

**MONTHLY SALARY**
Rs. 40,000 + Commission

Send your PDF Resume (file name as your full name)
Email: career@bahar.lk
Subject Line: "Business Development Executive"
(1322)



## காணி விற்பனைக்கு

றக்கா ஒழுங்கை, சுண்டிக்குளியில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு
**076 342 4705**
(4766)



## காணி விற்பனைக்கு

சுதுமலை அம்மன் ஆலயத்தில் இருந்து மிக அண்மையில் பிரதான வீதியில் இருந்து 2 ம் காணி 50m 1 பரப்பின் விலை 60.00000/=

**076 428 4896**
(4769)



## Happy Supermarket - உரும்பிராய்

| | |
|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 215/= Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 158/= |
| 1Kg சிவப்பு பருப்பு | - 249/= |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 389/= |
| 1Kg றவை | - 290/= |
| 1Kg சம்பா அரிசி | - 235/= |
| 1Kg வெள்ளைப் பச்சை | - 205/= |
| 1Kg தீட்டல்ப்பச்சை | - 240/= |
| 10Kg விஜிதா | - 2800/= |
| 1Kg மல்லி (M) | - 356/= |
| 1Kg உழுத்தம்பருப்பு | - 762/= |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 890/= |
| 1Kg கடலை | - 385/= |
| 1Kg சோயா | - 350/= |
| 400g விம் கட்டி | - 250/= 256/= |




பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30
(1324)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் [illegible] யாழ்ப்பாணம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org